வலை: 40.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 105 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 20 ஞாயிற்றுக்கிழமை (03.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# அஞ்சினார் ஜனாதிபதி அறிவித்தார் ஊரடங்கை

## நாளை காலை வரை நாடு முழு முடக்கம்




(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அரசுக்கு எதிராக எதிர்ப்புப் போராட்டங்கள் அதிகரித்துள்ள நிலையில் நாடுமுழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை மாலை 6 மணி முதல் நாளை திங்கட்கிழமை காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்.

இது தொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று மாலை வெளியிட்ட அறிக்கையில், இன்று (நேற்று) சனிக்கிழமை மாலை 15

ஊரடங்கு காலப் பகுதியில்

## அத்தியாவசிய தேவைக்கு வெளியில் செல்ல முடியும்

பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

ஊரடங்கு நேரத்தில் சில விடயங்களை பொதுமக்கள் செய்துகொள்ளலாம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதன்படி, அத்தியாவசிய தேவைகளுக்காக பொதுமக்கள் வெளியே செல்ல முடி 15

## ஊரடங்கு காலத்தில் தேவையற்று நடமாடாதீர்

யாழ். மாவட்ட அரச அதிபர்



(யாழ்ப்பாணம்)

தேவையற்ற நடமாட்டங்களை தவிர்த்து ஊரடங்கு காலத்தில் வெளியில் நடமாடாமல் இருப்பது சிறப்பானது என யாழ்ப்பாண மாவட்ட அரசா 15

## நீச்சல் தடாகத்தில் சடலம் மீட்பு

யாழ். தனியார் விடுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகர்ப்பகுதியில் உள்ள பிரபல தனியார் விடுதி ஒன்றின் நீச்சல் தடாகத்தில் இருந்து 15

ஊரடங்கு சட்டத்தை மீறி

# நாட்டில் பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் போராட்டம்

## பொலிஸ், இராணுவம் குவிப்பு

(கொழும்பு)

நாடுமுழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை மீறி நாட்டின் பல்வேறு பகுதிகளில் அரசுக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டின் வீதிகள் எங்கும் பொலிஸ், இராணுவம் குவிக்கப்பட்டுள்ளன. (15 ஆம் பக்கம் பார்க்க)



விமானப் போக்குவரத்துடன்

## தொடர்புடையோர் பயணிக்கலாம்

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் விமான நிலையப் பயணங்களில் ஈடுபடுவோருக்கு தளர்வு 15

## கொழும்பில் தரையிறங்கிய இந்திய இராணுவம்

சமூக ஊடகங்களில் செய்தி மறுத்தது இந்திய உயர்ஸ்தானிகராலயம்

(கொழும்பு)


இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை கருத்திற் கொண்டு, இந்திய 15

## அமைதியான முறையில் போராட இலங்கையர்களுக்கு உரிமை உண்டு

அமெரிக்க தூதுவர்

(கொழும்பு)

அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதற்கு இலங்கையர்களுக்கு உரிமை உண்டு என இலங்கைக்கான புதிய 15


Ambassador Julie Chung
@USAmbSL
Sri Lankans have a right to protest peacefully - essential for democratic expression. I am watching the situation closely, and hope the coming days bring restraint from all sides, as well as much needed economic stability and relief for those suffering.
8:42 AM - Apr 2, 2022

## பொது இடங்களில் நடமாடத் தடை

மற்றுமொரு வர்த்தமானியை வெளியிட்டார் ஜனாதிபதி



(கொழும்பு)

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச மற்றுமொரு விசேட வர்த்தமானி அறிவித்தலை நேற்று இரவு வெளியிட்டுள்ளார்.

இதன்படி இன்று (நேற்று) மாலை 6 மணி முதல் எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 15

## அரசாங்கத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டம்



(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய கடன் திட்டத்தின் கீழ்
# 40 ஆயிரம் மெட்ரிக் தொன் டீசல் கையளிப்பு

இந்தியாவின் 500 மில்லியன் டொலர் கடனுதவியின் கீழ் 40,000 மெட்ரிக் தொன் டீசல் இந்தியாவால் நேற்று இலங்கையிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகேயிடம் இதனை நேற்று சம்பிரதாயபூர்வமாக கையளித்தார்.

இதேவேளை லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் இலங்கை மின்சார சபைக்கு 6,000 மெட்ரிக்தொன் எரிபொருளை நேற்று வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## மக்களின் கடுமையான எதிர்ப்பு
# வைபவங்களை புறக்கணிக்கும் அரசாங்கப் பிரதிநிதிகள்

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது வைபவங்கள், கூட்டங்கள் மற்றும் மக்கள் சந்திப்புகள் போன்றவற்றில் கலந்து கொள்வதை தவிர்த்து வருவதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எரிவாயு, எரிபொருள், மின்சார நெருக்கடிகள் காரணமாக மக்கள் மத்தியில் எதிர்ப்பு ஏற்படலாம் என்பதால், இவர்கள் வைபவங்கள், கூட்டங்கள் மற்றும் சந்திப்புகளை தவிர்த்து வருகின்றனர்.

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவிருந்த பல நிகழ்வுகள் கடந்த வாரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடு, மின்சார துண்டிப்பு போன்ற காரணங்களால் பொது மக்கள் மத்தியில் அரசாங்கத்திற்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இதனால் வைபவங்களில் கலந்துகொள்ளும்போது மக்களின் இந்த எதிர்ப்பை தனியாக சந்திக்க நேரிடும் என்ற அச்சம் காரணமாக கலந்துகொள்ளாது தவிர்த்து வருகின்றனர்.

சில அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொலைக்காட்சி விவாதங்களில் கலந்துகொள்வதையும் தவிர்த்து வருவதாக கூறப்படுகிறது.(ம)

# பாடசாலைகளுக்கு நாளை முதல் விடுமுறை
## கல்வி அமைச்சு

(கொழும்பு)

தவணை பரீட்சைக்கு தோற்றும் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் மாணவர்களை எதிர்வரும் 8 ஆம் திகதி வரையில் பாடசாலைகளுக்கு அழைப்பதற்கு அதிபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய மாணவர்களுக்கு நாளை 4 ஆம் திகதி முதல் விடுமுறை வழங்க முடியும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் 2022ஆம் ஆண்டில் அரச மற்றும் அரச அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகளின் கற்பித்தல் காலம் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டில் 139 நாட்கள் பாடசாலை கற்றல் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சுற்றுநிருபம் அனைத்து கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் 2022ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திலும், சாதாரணதரப் பரீட்சை அடுத்த ஆண்டின் முற்பகுதியிலும் நடத்தப்படும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம)

# சாதாரணதர, உயர்தர பரீட்சைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

2022 கல்வி ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகளை எதிர்வரும் ஒக்டோபரில் நடத்துவதற்கும், டிசம்பரில் இடம்பெற வேண்டிய சாதாரண தர பரீட்சைகளை 2023 ஜனவரியில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதி பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பிரணவதாசன் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு ஆண்டுகளாக நிலவிய கோவிட் அச்சுறுத்தலால் தேசிய பரீட்சைகளை குறிப்பிட்ட காலப்பகுதியில் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. இதன் காரணமாக சகல பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

அதற்கமைய 2021 ஆம் ஆண்டுக்கான சாதாரணதர பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் இடம்பெறவுள்ளன.

இந்நிலையில் மூன்று மாதங்கள் என்ற குறுகிய கால இடைவெளியில் மீண்டும் ஆகஸ்டில் உயர்தர பரீட்சைகளை நடத்த முடியாது என்பதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2021 ஆம் ஆண்டுக்கான சாதாரணதர பரீட்சைகள் மே மாதம் 21 ஆம் திகதி முதல் ஜூன் 5 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

இவ்வாண்டுக்கான உயர்தர பரீட்சைகள் ஒக்டோபர் 14 ஆம் திகதி முதல் நவம்பர் 13 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மருத்துவ ஆய்வுகூட இரசாயனப் பொருட்தட்டுப்பாடு
## யாழ். போதனாவில் பரிசோதனைகள் நிறுத்தப்படலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவ ஆய்வுகூட இரசாயனப் பொருட்களுக்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆய்வுகூடப் பரிசோதனைகள் நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)


# மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி
வினோதினி லோகநாதன்
SLTS - I
(ஆசிரியை -
யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்)

Best Wishes

மாண்புமிகு ஆசிரியப் பணிதனிலே இணைந்து
மாணவரின் உயர்வுக்காய் உழைத்தவர்
பேனுமுயர் புலமைப் பரீட்சையிலே மாணவர்கள்
உயர்புள்ளி பெற்றிட பாடுபட்டார்
காணுமுயர் சாதனை காசிப்பிள்ளை வித்தியாலயம்
கண்டிட தன்னை அர்ப்பணித்தார்
வானளாவ நின்சேவை தொடரட்டும் என்றும்
வாழ்த்தினோம் மணிவிழா நன்னாளில் வாழியவே!

பாடசாலைச் சமூகம்
யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம் (C-4115)


# வவுனியாவில் வாள்வெட்டு
## மூவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மதுபானசாலைக்கு முன்பாக ஊரடங்கு அமுலில் இருந்த நேரத்தில் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதலில் மூவர் காயமடைந்துள்ளனர்.

மதுபானசாலை மூடியதன் பின்னர் மதுபானசாலைக்கு முன்னால் மூவருக்கிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதன் போது ஓர் நபர் தனது மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த மரம் அறுக்கும் வாள் மூலம் மற்றைய இருவர் மீதும் தாக்குதல் மேற்கொண்டுவிட்டு அவ்விடத்தை விட்டு செல்ல முற்பட்டபோது மற்றைய இருவரும் இணைந்து அவரின் வாளை பறித்து அவர் மீதும் வாள் மற்றும் கற்களால் தாக்குதல் மேற்கொண்டதுடன் தாக்குதலில் காயமடைந்த நபர் அங்கிருந்து வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு சென்று தஞ்சமடைந்தார்.

அதன் பின்னர் மற்றைய இருவரும் அவ்விடத்திலிருந்து வாளுடன் வெளியேறி சென்றதுடன் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(ம-250)


## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றில் பணி புரிவதற்கு ஓரளவு கணனி அறிவுடைய பெண் வேலையாட்கள் தேவை. (10892)

077 964 5877

## சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வாழும் 39 வயது, அனுஷ நட்சத்திர, செவ்வாய் குற்றமற்ற, விவாகரத்தான மணமகளுக்கும், கனடாவில் வாழும் 39 வயது, உத்தராட நட்சத்திர, செவ்வாய் குற்றமற்ற மணமகனுக்கும் மணமக்களை இலங்கையில் தேடுகிறோம். (10891)

தொடர்புகளுக்கு

0014166661855, 077 387 6969, 021 222 1515


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகாலச் சட்டத்தை உடனடியாக

## மீளப் பெறுமாறு கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கையில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி உடனடியாக மீளப் பெற வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.**



அரசுக்கெதிரான எதிர்ப்பினையும் போராட்டங்களையும் இதன்மூலம் அடக்க முடியாது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை முழுவதும் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் நேற்று முன்னிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தி ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு 40 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி

(கொழும்பு)

இந்தியாவின் கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் ஒருதொகை அரிசி அடுத்த வாரம் நாட்டை வந்தடையவுள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 40 ஆயிரம் மெற்றிக் தொன் அளவான நாடு, சம்பா, வெள்ளை அரிசி ஆகிய அரிசி வகைகள் நாட்டிற்கு கிடைக்கப் பெறவுள்ளன.

அவற்றை உடனடியாக மக்களுக்கு சலுகை விலையில், விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# 40,000 மெற்றிக்தொன் டீசலுடன் இலங்கை வந்த இந்தியக் கப்பல்

(கொழும்பு)

இந்திய கடன் வசதியின் கீழ் 40,000 மெற்றிக் தொன் அளவிலான டீசல் தாங்கிய கப்பலொன்று நேற்று நாட்டை வந்தடைந்தது.

அதற்கமைய நேற்று மாலை எரிபொருள் தரையிறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி)

# மின்வெட்டால் மெழுகுவர்த்திக்கும் தட்டுப்பாடு



(கொழும்பு)

மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவதை அடுத்து உள்ளூர் சந்தையில் மெழுகுவர்த்திகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், சந்தையில் விற்பனைக்கு வரும் மெழுகுவர்த்திகளின் விலைகளும் உயர்ந்துள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். சிறிய மெழுகு வர்த்தி 15 ரூபாவாகவும் பெரிய மெழுகு வர்த்தி 75 ரூபாவாகவும் அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை சரியான நேரத்தில் முன்வைப்போம்

## உதய கம்மன்பில

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மை இழந்தால் இடைக்கால அரசாங்கத்தை அமைக்க திட்டமிட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இன்று மக்கள் எதிர்நோக்கும் கடும் சிரமங்களால் அரசாங்கத்துக்கு எதிரான போரட்டங்கள் பற்றி கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் .

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்ட பின்னர், அடுத்த பாராளுமன்றத் தேர்தல் வரை இடைக்கால அரசாங்கத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சரியான நேரத்தில் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்க திட்டமிட்டுள்ளதோடு தேர்தலில் மக்கள் விரும்பும் ஆட்சியை அமைக்க வாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# பாடசாலைகளுக்கு நாளை முதல் விடுமுறை வழங்குமாறு கோரிக்கை

(கொழும்பு)


நாளை திங்கட்கிழமை முதல், முன்கூட்டியே பாடசாலைகளுக்கு விடுமுறையை அறிவிக்குமாறு கல்வி அமைச்சுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால், இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் தெரிவித்துள்ளார்.

நீண்ட மின் தடை காரணமாக பாடசாலை மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளமையினால் இவ்வாறு பரிந்துரை முன்வைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# மத்திய வங்கியின் நாணயசபை உறுப்பினர் பதவி விலகல்

(கொழும்பு)



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் உறுப்பினர் சமந்த குமாரசிங்க பதவியிலிருந்து விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆயினும், பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டாரா? இல்லையா? என்பது தெளிவாகத் தெரியவில்லை.

சமந்த குமாரசிங்க நாட்டின் மிகப் பெரிய மூலிகை அழகு சாதனப் பொருட்கள் நிறுவனங்களில் ஒன்றின் உரிமையாளர்.

2019 இன் பிற்பகுதியில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பிறகு அவர் நாணயச் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

அண்மைக்காலமாக நாணயச் சபையின் கூட்டங்களின் போது அவர் ஓரங்கட்டப்பட்டதாகவும் ரூபாவை மிதக்கவிடும் நாணய சபையின் முடிவை அவர் பெரிதும் எதிர்த்ததாகவும் இந்நிலையிலே அவர் தனது பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# மரண அறிவித்தல்

தோற்றம் 1957 . 02 . 13



மறைவு 2022 . 03 . 31

*மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட* **விநாயகமூர்த்தி தயானந்தம் (தயா)** *கடந்த (31.03.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி ஆச்சிமுத்து தம்பதிகளின் இளைய புதல்வனும், காலஞ்சென்ற முத்தையா உடையார் மற்றும் சரோயா அம்மா அவர்களின் அன்பு மருமகனும், சாந்தியின் அன்புக் கணவரும், சந்திரப்பிரகாஷ் (லண்டன்), ராஜேஸ்கண்ணா (இந்தியா), அல்பி இன்பென்டா (இந்தியா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரீத்தி சந்திரப்பிரகாஷின் அன்பு மாமனாரும், குட்டி, பாப்பா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவசோதி, சிவானந்தம் மற்றும் சடாச்சரம் கற்கண்டு, சுப்பிரமணியம், காலஞ்சென்ற ஆனந்தநடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரோஸ்மேரி (இந்தியா), பௌலின் மேரி (இந்தியா), புஸ்பா மேரி (இந்தியா), பன்னீர்செல்வம் (இந்தியா), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.*


*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (துறைமுகம் மாதகல்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**077 858 8624**

(c-4113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸிக்கு எதிரான ஒரு நாள் தொடர் பாகிஸ்தான் அணி சிறப்பான வெற்றி



அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 6 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 1-1 என்ற கணக்கில் சமநிலைக்கு கொண்டு வந்துள்ளது. லாகூர் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 348 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பென் மெக்டர்மோட் 104 ஓட்டங்களையும் ட்ராவிஸ் ஹெட் 89 ஓட்டங்களையும் மார்னஸ் லபுஸ்சேகன் 59 ஓட்டங்களையும்பெற்றுக்கொண்டனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஷாயின் அப்ரிடி 4 விக்கெட்டுகளையும் மொஹமட் வாசிம் 2 விக்கெட்டுகளையும் ஸாஹித் மஹ்மூத் மற்றும் குஸ்தீல் ஷா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 349 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, 49 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 6 விக்கெட்டு களால் சிறப்பான வெற் றியை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பாபர் அசாம் 114 ஓட்டங்களையும் இமாம் உல் ஹக் 106 ஓட்டங்களையும் பகர் சமான் 67 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஆடம் செம்பா 2 விக்கெட்டுகளையும் நாதன் எலீஸ் மற்றும் மார்கஸ் ஸ்டொயினீஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 83 பந்துகளில் ஒரு சிக்ஸர் 11 பவுண்ரிகள் அடங்கலாக 114 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட பாபர் அசாம் தெரிவு செய்யப்பட்டார். (4-6)

# சதம் விளாசிய டாம் லதாம் நெதர்லாந்தை வீழ்த்தியது நியூஸிலாந்து

நெதர்லாந்து அணி 3 ஒருநாள் போட்டி மற்றும் ஒரு இருபது-20 போட்டிகளில் விளையாடுவதற்காக நியூஸிலாந்துக்கு சென்றது. இருபது-20 போட்டி மழை காரணமாக டாஸ் கூட போடாத நிலையில் போட்டி நடக்கவில்லை. இதனையடுத்து கடந்த மாதம் ,29 ஆம் திகதி முதல் ஒருநாள் போட்டி நடைபெற்றது. அதில் நியூஸிலாந்து அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதனையடுத்து இரு அணிகளுக்கும் இடையேயான 2 ஆவது ஒரு நாள் போட்டி நேற்று நடைபெற்றது. டாஸ் வென்ற நெதர்லாந்து அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

நியூஸிலாந்து அணி வீரர்கள் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை பறிக்கொடுத்தனர். அந்த 32 ரன்கள் எடுப்பதற்க்குள் 5 விக்கெட்டுகளை எடுத்து தடுமாறியது. லாதம்-கிராண்ட் ஹோம் சிறிது நேரம் தாக்குப்பித்தனர். 16 ரன்கள் எடுத்த நிலையில் கிராண் ட்ஹோம் அவுட் ஆனார். இதனையடுத்து லாதம்-வுடன் பிரேஷ்வேல் ஜோடி சேர்ந்து நிதானமாக விளையாடினர். ஒரு பக்கம் நிலைத்து ஆடிய லாதம் சிறப்பாக ஆடி சதம் அடித்தார்.

இறுதியில் நியூஸிலாந்து அணி 50 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 264 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக லாதம் 140 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். நெதர்லாந்து தரப்பில் வான் பீக் 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

265 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நெதர்லாந்து அணி களமிறங்கியது. முதல் 2 விக்கெட்டுகள் உடனே சரிந்த நிலையில் விக்ரம்ஜித் சிங்-பாஸ் டி லீடே ஜோடி நிதானமாக ஆடி ரன்களை சேர்த்தனர். 81 ரன்கள் எடுத்த நிலையில் விக்ரம்ஜித் சிங் அவுட் ஆனார். இதனையடுத்து வந்த வீரர்கள் சொற்ப ரன்னில் வெளியேற 34.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து நெதர்லாந்து அணி 146 ரன்கள் மட்டுமே எடுத்தது.



இதனால் நியூஸிலாந்து அணி 118 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றியது. 3 போட்டிகள் கொண்ட தொடரில் நியூஸிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகுக்கிறது. 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நாளை நடைபெறும்.

## பெண்கள் உலகக் கிண்ணம்

# இறுதிப் போட்டி நடுவராக இந்திய பெண் நியமனம்



பெண்கள் உலக கிண்ண கிரிக்கெட்டில் அவுஸ்திரேலியா- இங்கிலாந்து இடையிலான இறுதிப்போட்டி கிறைஸ்ட்சர்ச் நகரில் இன்று காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இறுதி ஆட்டத்துக்கான போட்டி நடுவராக இந்தியாவைச் சேர்ந்த ஜி.எஸ். லட்சுமி நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) போட்டி நடுவர்கள் குழுவில் இடம் பிடித்த முதல் பெண் என்ற பெருமை ஆந்திராவைச் சேர்ந்த லட்சுமிக்கு உண்டு.

ஏற்கனவே ஆண்களுக்கான ஒருநாள் போட்டியில் இதே பணியை செய்துள்ளார். லாரன் ஆகென்பேக் (தென்னாபிரிக்கா), கிம் காட்டன் (நியூஸிலாந்து) கள நடுவர்களாகவும், ஜாக்யூலின் வில்லியம்ஸ் (மேற்கிந்தியத்தீவு) டி.வி. நடுவராகவும் செயற்பட உள்ளனர். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திற்கு அதிகரிக்கும் நெருக்கடி
## மற்றுமொரு இராஜாங்க அமைச்சரும் இராஜினாமா



(கொழும்பு)

தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தனது இராஜாங்க அமைச்சர் பதவியினை இராஜினாமா செய்யவுள்ளதாக ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அறிவித்துள்ளார்.

ரொஷான் ரணசிங்கவின் பதவி விலகல் குறித்த அறிவிப்பானது அரசாங்கத்திற்கும் மேலும் கடுமையான நெருக்கடிகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நி)

# இருண்டது நாடு வறண்டது வயிறு
## கிழக்கில் மாபெரும் போராட்டம்



(கொழும்பு)

நாட்டின் இன்றைய சூழ்நிலையில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் இலங்கையர்களின் பிரச்சினைகளை தீர்க்குமாறு வலியுறுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் பேரணி ஒன்று நேற்று அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச் சேனையில் இடம்பெற்றது. (நி)

# கொழும்பு - பஹ்ரைன் சேவைகள் இடைநிறுத்தம்
## ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி முதல் சில விமானங்கள் சேவையிலிருந்து நிறுத்தப்படுவதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் திடீரென முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்புக்கும் பஹ்ரைனுக்கும் இடையேயான UL201 மற்றும் UL202 விமானங்களை நிறுத்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்புக்கும் மொஸ்கோவிற்கும் இடையிலான விமான சேவைகள் கடந்த 28 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்படுவதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


**நல்லூர் பிரதேச சபை**

**அரியாலைசித்துப்பத்தி இந்துமயான சபை பொதுக் கூட்டம் அழைப்பு**

மேற்படி சபையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 2022.04.17 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணிக்கு அரியாலை பிரப்பங்குளம் மகமாயி அம்மன் ஆலய திருமணமண்டபத்தில் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தலைமையில் இடம்பெறும். அத்தருணம் புதிய நிர்வாக சபை தெரிவுடன் மயான அபிவிருத்தி தொடர்பிலும் ஆராயப்படும். மயானத்துடன் தொடர்புபட்டயாவரும் கலந்து கொள்ளுமாறு இத்தால் அறியத்தருகிறேன்.

ப.மயூரன்
தவிசாளர்
நல்லூர் பிரதேச சபை

2022.04.03

(சி-4108)



# நீங்கா நினைவலைகள்...



குருசுப்பிள்ளை சாமிநாதர்
மண்ணில்- 23.09.1928
விண்ணில்- 22.03.2018



சாமிநாதர் மேரி மெற்றில்டா
மண்ணில்- 19.03.1940
விண்ணில்- 03.04.2021



சாமிநாதர் யூலியஸ் றூபேந்திரன்
மண்ணில்- 22.06.1957
விண்ணில்- 13.01.2012



டோமினிக் விக்ரர் ராஜமன்னர்
மண்ணில்- 11.08.1937
விண்ணில்- 16.11.2004

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
எக் காலமும் எம்முடன் வாழ்வீர்

(சி-4107)

என்றும் உங்கள் நினைவுகளை
நெஞ்சில் சுமக்கும்
குடும்பத்தினர்.


# இராசிபலன்

03.04.2022
பங்குனி 20, ஞாயிற்றுக்கிழமை
துதியை பிற்பகல் 1.28 மணிவரை

அச்சுவினி பிற்பகல் 1.20 மணிவரை
சுபநேரம் - 9.10- 10.40 மணிவரை
இராகு காலம் -4.40-6.10 மணிவரை

சந்திராஷ்டமம்-
உத்தரம்,அத்தம்

**வளவன்**



மேஷம்

உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவுப் பலிதமுண்டு, பணியில் சிறு மன உழைச்சல் ஏற்படலாம், வழிபாட்டுச்சிந்தனை மேலோங்கும் நாள்.



இடபம்

பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.



மிதுனம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள்.



கடகம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.



சிம்மம்

சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், பேச்சில் இனிமை தென்படும் பயணங்கள் கைகூடும்.



கன்னி

கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம்.



துலாம்

கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.



விருச்சிகம்

எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், விரதம் வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.



தனுசு

கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளால் பெருமையுண்டு.



மகரம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், வாகன சுகமுண்டு.



கும்பம்

பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.



மீனம்

இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

நீங்கள் நம்பிக்கையோடு உழைப்பதால் உங்கள் ஆசைகள் நிறைவேறுவதைக் காண்பீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசிற்கு எதிராக யாழில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**பொருட்களின் விலையேற்றம் மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக பொதுமக்களினால் யாழில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

மாக்சிச லெனினிச கட்சியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தின் போது, பொருட்களின் விலையேற்றம் மற்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பிலான வசனங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தற்போதைய அரசாங்கத்தை வீட்டிற்கு போகச் சொல்லியும், அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் கட்சிகளுக்கு எதிராகவும் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து போராட்டங்களை முன்னெடுக்க வருமாறு அழைப்பு விடுத்தனர். (4-6-18-33-101-104)

# பறிமுதல் செய்யப்பட்ட மணலை நீதிமன்றில் பாரப்படுத்துங்கள்

## சாவ.உபதவிசாளர் கோரிக்கை

(சாவகச்சேரி)

மணல் கடத்தல்காரர்களிடமிருந்து பறிமுதல் செய்து வைக்கப்பட்டிருக்கும் மணலையும் பொலிஸார் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக விவாதிக்கப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

கெற்பேலி மக்கள் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துமாறு எமது சபைக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

மணல் அகழ்வது மற்றும் மணலை கொண்டு செல்வது எவ்வாறு சட்டவிரோதச் செயற்பாடோ அது போன்றே மணலை சேமித்து வைப்பதும் சட்டவிரோத செயற்பாடாகும். ஆனால் பொலிஸார் சேமித்து வைத்திருக்கும் மணலை நீதிம்ன்றில் பாரப்படுத்துவதில்லை.

எனவே எதிர்காலத்தில் எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கெற்பேலி, மந்துவில் உள்ளிட்ட பகுதிகளில் சேமித்து வைத்திருக்கும் மணலை பொலிஸார் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

உபதவிசாளரின் கருத்தை ஏற்ற சபை அரசாங்க அதிபர் ஊடாக குறித்த சபைத் தீர்மானத்தை உரிய தரப்பினருக்கு அறிவிக்க தீர்மானம் எடுத்தனர். (4-5-30)

# பொருளாதார நெருக்கடிக்கு சில வாரங்களில் தீர்வு

## ஆட்சி மாற்றம் ஒருபோதும் நடைபெறாது என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

(அராலி)

இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய செயற்பாடு அண்மைய நாட்களாக குறைவடைந்துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடற்றொழில் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட ஒரு பகுதி கடற்றொழிலாளர்களுக்கான மனிதாபிமான உதவிப் பொதிகள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்று முன்தினம் பயனாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில் செயற்பாடுகள் அவதானிக்கப்படுமாயின், அதற்கெதிராக வடக்கு கடற்றொழிலாளர்கள் ஜனநாயக வழியில் தமது அதிருப்தியை வெளியிட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்கள் இன்னும் சில வாரங்களில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விடும் என்று நம்புவதாகவும் எதிர்க் கட்சிகள் எதிர்பார்ப்பதைப் போன்று தற்போதைக்கு ஆட்சி மாற்றம் ஏற்படாது எனவும் தெரிவித்தார். (4-5-104)

# சங்கக் கடையில் பணம் திருட்டு

(கரணவாய்)

நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்க கரவெட்டி சம்பந்தர் கடை கிளையில் நேற்று முன்தினம் 79 ஆயிரத்து 500 ரூபாய் திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சங்க முகாமையாளரால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டிற்கு அமைய பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-60)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இல.625 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்ட one max city வியாபார நிலைய திறப்பு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு நடை பெறவுள்ளது. (4-6)

# அதிபருடன் தகராறில் ஈடுபட்ட மூவர் பொலிஸாரால் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாடசாலை ஒன்றின் அதிபருடன் தகராறில் ஈடுபட்ட மூவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், நெல்லியடியைச் சேர்ந்த ஒருவரும் வட்டுக்கோட்டையை சேர்ந்த இருவருமென மொத்தமாக மூவர் குறித்த பாடசாலையின் மதில் பாய்ந்து உள்ளே சென்று அதிபருடன் தகராறில் ஈடுபட்டனர்.

இதனை அறிந்த, பழைய மாணவர்கள் அவ்விடத்திற்கு வந்தவேளை இருவர் தப்பிச் சென்ற நிலையில் ஒருவர் பழைய மாணவர்களால் மடக்கி பிடிக்கப்பட்டார். இவ்வாறு மடக்கிப் பிடிக்கப்பட்ட நபர் நையப்புடைக்கப்பட்ட பின்னர் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த சந்தேக நபரிடம் மேற்கொண்ட விசாரணையின் பிரகாரம் நேற்று மாலை மற்றைய சந்தேக நபர்கள் இருவரையும் அதிரடியாக கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களிடமும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-104)

# சைக்கிள் திருடன் சிக்கினார்



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம் சந்திப்பகுதியில் பாடசாலை மாணவர்களின் சைக்கிளை தொடர்ச்சியாக திருடி விற்பனை செய்து வந்தவர் நேற்று முன்தினம் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் இதுவரையில் 5 சைக்கிள்களை திருடியுள்ளதுடன் ஒரு தண்ணீர் பம்பியும் திருடியுள்ளமை தெரிய வந்தது.

திருடப்பட்ட சைக்கிள் களை வேறு ஒருவரிடம் விற்பனை செய்துள்ளதுடன் விற்பனை செய்த சைக்கிள்களை விலைக்கு பெற்றவரிடமிருந்து 3 சைக்கிள்களை பொலிஸார் மீட்டுள்ளதுடன் சைக்கிள்களை விலைக்கு வாங்கியவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலதி விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-316)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் தற்போது நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டும், அமரர். செபமாலை ஜெறின்சனின் முதலாம் ஆண்டு நினைவாகவும் நாவாந்துறை சென். மேரிஸ் இளைஞர் கழகம் ஏற்பாடு செய்துள்ள மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் நாவா ந்துறை புனித மரியாள் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.



மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு [illegible] முகாம் நிகழ்வின் [illegible]ளர்கள் கேட்டுள்ளனர். (4-6-18)

# அலங்காரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய அலங்காரத் திருவிழாவானது கடந்த 23 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமானது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் இடம்பெறும் மஹோற்சவத்தில் நாளை மறுதினம் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அஷ்டோத்திரசத சங்காபிஷேகம் நடைபெற்று தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெரவலப்பிட்டி மின்னுற்பத்தி நிலையத்திற்கு 6 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல்

## தடைப்பட்ட மின்னுற்பத்தி மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

ஐ.ஓ.சி உடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி கெரவலப்பிட்டி மின்னுற்பத்தி நிலையத்திற்கு ஐ.ஓ.சி நிறுவனம் 6.000 மெற்றிக் தொன் டீசல் வழங்கியுள்ளது.

இதன்படி, கெரவலபிட்டிய மின் உற்பத்தி நிலையத்தில் மீண்டும் மின் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

இம்மின்னுற்பத்தி நிலையம் எரிபொருள் பற்றாக் குறையால் சமீபத்தில் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சித்தாலேப குழுமத்தின் தலைவர் காலமானார்



(கொழும்பு)

உள்நாட்டு தயாரிப்பான சித்தாலேப தைல குழுமத்தின் தலைவர் மருத்துவர் விக்டர் ஹெட்டிகொட காலமானார்.

அவர் தனது 84 ஆவது வயதில் நேற்று சனிக்கிழமை காலை காலமானார்.

ஆயுர்வேத தொழில்துறைக்கு மருத்துவர் விக்டர் ஹெட்டிகொட ஆற்றிய பங்களிப்பை கௌரவித்து அவருக்கு கடந்த 1990 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாஸவினால் “தேசபந்து” விருது வழங்கப்பட்டது. (நி)

# இலங்கையின் நிலைமை படுமோசம்

## நியூசிலாந்து பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையிலுள்ள நியூசிலாந்து பிரஜைகளுக்கு நியூசிலாந்து உயர்ஸ்தானிகராலயத்தினால் பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார நிலைமை மோசமடைந்து வருவதாகவும், இதன் காரணமாக எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களுக்கு பற்றாக் குறை ஏற்பட்டு நீண்ட நேர மின் விநியோகத் தடை முன்னெடுக்கப்படுவதாகவும் நியூசிலாந்து உயர்ஸ்தானிகராலயம் சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும் நாட்டில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் படுவதாகவும் இலங்கையிலுள்ள நியூசிலாந்து உயர்ஸ்தானிகராலயத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையிலுள்ள நியூசிலாந்து பிரஜைகள் அவசர நிலைமைகளின் போது நியூசிலாந்து தூதரகத்தை தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி)

# அவசரகாலச் சட்டத்தை மீளப்பெறுமாறு சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

அவசரகால சட்டத்தை, அவசரமாக மீளப்பெறுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சட்டத்தரணிகள் சங்கத்தால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில், மக்களின் அடிப்படை உரிமைகளான பேச்சு சுதந்திரம், வெளியீட்டு சுதந்திரம் மற்றும் அமைதியாக ஒன்றுகூடும் சுதந்திரம், கருத்து சுதந்திரம் போன்றவற்றை உறுதி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களின் இறையாண்மையின் அம்சங்கள் மதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் அரசோ அல்லது அதன் முகவர்களாலோ பாதிக்க இடமளிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: 13 சூரி 11 செவ் 12 இல்<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: O/L விவாசாயம்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12473 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: 63 சூரி 5 செவ் 7.இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு : உள்நாட்டு படித்த மணமகன்<br>தொ.இ:G/12507 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: சூரி 7 செவ் 6 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L பாரவூர்தி சாரதி<br>எதிர்பார்ப்பு:படித்த பெண் சைவபோசணம் அசைவமும் ஏற்றுக்கொள்ளப்படும<br>தொ.இ: B/12476 | பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: 13 ¾ சூரி 12 செவ் 11 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSC/பொறியியளாளர்<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ:G/12511 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம் : சித்திரை 2<br>கி.பா: சூரி 4 செவ் 7<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ் சொந்தக்கடை)<br>எதிர்பார்ப்பு: உள்நாட்டு படித்த பெண்<br>தொ.இ: B/12479 | பிறப்பு:1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 63 சூரி 9 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு : பட்டதாரி அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/12518 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: ஓடிற்றர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: படித்த வெளிநாட்டு பெண்<br>தொ.இ: B/12483 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 10 சூரி 11 செவ் 9<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: BEng(Hons) Software Engineering Data Analyst<br>எதிர்பார்ப்பு: அரசதனியார் உத்தியோகத்தர்<br>தொ.இ:G/12520 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# கோட்டாபயவின் ஆஸ்தான ஜோதிடரின் ஆலயம் முற்றுகை; குவிக்கப்பட்டது அதிரடிப்படை



(கொழும்பு)

கோட்டாபயவின் ஆஸ்தான ஜோதிடரின் ஆலயத்தை பொது மக்கள் சுற்றி வளைத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அந்த ஆலயத்திற்கு கோட்டாபய செல்லவுள்ளார் என்ற தகவல் அறிந்தே சுற்றிவளைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில், ஹிருணிகா பிரேமச்சந்திர தலைமையிலான ஐக்கிய பெண்கள் சக்தியினர் குறித்த ஆலயத்தை சுற்றிவளைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், ஜனாதிபதியின் ஆஸ்தான ஜோதிடரை பாதுகாப்பதற்காக அனுராதபுரம் ஆலயத்திற்கு அருகில் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த ஆலயத்தில் ஆன்மீக அமைதி தேடி கோட்டபாய அடிக்கடி அங்கு சென்று வருவது வழமை. இந்நிலையிலேயே கோட்டாபய ஆலயத்திற்கு வரவுள்ளார் என்ற தகவலின் பேரில் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு திரண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# ஆட்சியை ஒப்படைத்துவிட்டு அமெரிக்காவுக்கு செல்லுங்கள்

## கோட்டாபயவிற்கு எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது தாய் நாட்டுக்கு உடனடியாக திரும்ப வேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார். ஆட்சி அதிகாரத்தை பாராளுமன்றிடம் ஒப்படைத்துவிட்டு ஜனாதிபதி கோட்டாபய தாய் நாடு திரும்ப வேண்டுமென எச்சரித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்திற் கொண்டு வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடக்கப்படும் சமூக ஊடகங்கள்?

(கொழும்பு)

தேவை ஏற்பட்டால் நாட்டில் சமூக ஊடகங்கள் தொடர்பில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சிரேஷ்ட ஊடக பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.



மிரிஹானவில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்கள் ஊடாக மேலும் வன்முறையைத் தூண்டினால் அடுத்தகட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன, "சமூக ஊடகங்கள் மூலம் வன்முறைச் சம்பவத்தைச் செய்ய ஏதேனும் உந்துதல் அல்லது தூண்டுதலின் ஆபத்து இருந்தால், தற்போது உள்ள சட்டத்தின்படி செயற்பட வேண்டி ஏற்படும்" எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மின்சார நெருக்கடியால் வங்கிச் செயற்பாடுகளில் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடி காரணமாக வங்கியின் செயற்பாடு பாரிய பிரச்சினையாக மாறியுள்ளதாக இலங்கை வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மின்சாரம் தடைப்படும் போது வங்கிகள் மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்தி தங்கள் தொழிலை நடத்துகின்றன. எனினும், அவற்றுக்கான எரிபொருளை பெறுவது பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது என தொழிற்சங்க செயலாளர் ரஞ்சன் சேனாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எரிபொருள் பற்றாக்குறை காரணமாக வங்கி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இரவில் வங்கிகள் மூடப்பட்டு ஏ.டி.எம்.இயந்திரங்கள் செயற்பட வேண்டும்.

ஆனால், தற்போதுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அது சவாலாக இருக்கிறது. இந்நிலை தொடர்ந்து நீடித்தால் மின்சாரம் தடைப்படும் போது இயந்திரங்கள் பழுதடையும் என அவர் தெரிவித்தார். (நி)

# தனிநபரிடம் அதிகாரக் குவிப்பு முறை மாற்றப்பட வேண்டும்-கர்தினால் மல்கம்

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் அமைப்பில் மாற்றங்களை மேற்கொள்வதே நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளிற்கு தீர்வு எனவும், தனிமனிதர்களை மாற்றுவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

மேலும் உயர்ந்த பதவிகளில் உள்ளவர்களை அகற்றுவது தீர்வாக அமையாது. அது பயனுள்ள விடயமல்ல என்பது நிரூபணமாகிவிட்டது.

அத்தோடு தனிநபரிடம் அதிகாரம் அனைத்தையும் குவிக்கின்ற அமைப்பு முறையை மாற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ள அவர், உயர் பதவியில் உள்ளவர்களிற்கு சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களிப்பதை மாற்ற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

உறவினர்களையும் சகாக்களையும் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்பதோடு, நிபுணர்களின் ஆலோசனைக்கு ஏற்ப அரச நிறுவனங்களில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி)

# அமைச்சுப் பதவிகளை துறக்க தயாராகும் சுதந்திரக் கட்சி



(கொழும்பு)

இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படாவிட்டால், அமைச்சுப் பதவிகளைத் துறந்து அரசிலிருந்து வெளியேறுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் கடிதம் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)


# 45ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்.செல்லத்துரை செல்வக்குமார்



18.02.2022 அன்று திருமதி. செல்வக்குமார் அருள்யுசி அவர்களின் அன்புக் கணவர் S.செல்வக்குமார் அவர்கள் அகால மரணமடைந்த செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்த மற்றும் உதவிக்கரம் புரிந்த அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது குடும்பத்தின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(C-4109)

திருமதி. செல்வக்குமார் அருள்யுசி
(முன்னாள் போதனாசிரியர் மனை முகாமைத்துவம் மற்றும் உணவு தொழில்நுட்பம் வலயக்கல்வி அலுவலகம் மருதனார்மடம்)
உரும்பிராய் வடக்கு உரும்பிராய்.
077 922 0843


# 3,800 மெ.தொன் எரிவாயுவுடன் நாளை வரும் கப்பல்

(கொழும்பு)

எரிவாயு தாங்கிய மற்றுமொரு கப்பல் நாளை நாட்டை வந்தடைய உள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்தக் கப்பலில் 3,500 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கியுள்ளதாக அந்த நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், கப்பல் ஒன்றிலிருந்து தரையிறக்கப்பட்டுள்ள 3,800 மெற்றிக் தொன் எரிவாயுவை விநியோகிக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 260 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 150 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 260 | 250 | 250 | 400 |
| தக்காளி | 80 | 70 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 130 | 100 | 80 |
| கோவா | 80 | 80 | 100 | 100 |
| கரட் | 140 | 200 | 200 | 250 |
| பூசணி | 60 | 70 | 80 | 80 |
| புடோல் | 150 | 120 | 120 | 100 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 100-250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 180-220 | 220 |
| பாகற்காய் | 300 | 400 | 300 | 250 |
| வெண்டிக்காய் | 180 | 160 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 100 | 160 |
| பயற்றங்காய் | 400 | 400 | 250 | 250 |
| லீக்ஸ் | 120 | 140 | 140 | 160 |
| பீற்றூட் | 120 | 160 | 130 | 160 |
| கறிமிளகாய் | 180 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 1500 | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 200 | 250 | 220 | 300 |
| கத்தரிதம்புள்ள | 240 | 150 | — | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 160 | 120 | 180 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-80 | 60-90 |
| இராசவள்ளி | 200 | 150 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 200 | — | — | 320 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | — | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். பொருளியல் பேராசிரியர் நல்லதம்பி பேரின்பநாதன் அவர்கள் அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்பும் பண்பும் மிகுந்த பேராசிரியர் பேரின்பநாதன் அவர்களின் மறைவு பேரிழப்பாகும். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:** அதுசரி, யாழ்ப்பாணத்தில நடந்த ஊர்வலத்தில குழப்பத்தை ஏற்படுத்தினவர் பாடு இப்ப எப்படி இருக்குதாம்.

**விதானையார்:** எல்லாக் கூட்டங்களையும் குழப்புகிற அந்த நபர், நேற்று முன்தினம் (01) யாழ்ப்பாணத்தில நடந்த ஊர்வலத்தையும் குழப்ப முற்பட்டிருக்கிறார். இதனை அவதானித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்த நபருக்குத் தர்ம அடி போட்டிருக்கினம்.

**மூப்பர்:** ஆனாலும் விதானையார் அந்த நபரைக் காப்பாற்ற பொலிஸார் எவ்வளவு தயார் நிலையில இருந்தினம் என்பதைப் பார்த்தியள்தானே.

**விதானையார்:** இனிப் பொலிஸாரும் ஒண்டும் செய்ய முடியாது பாருங்கோ. நல்லூரில தியாகி திலீபன்ர நினைவேந்தலுக்கு எதிராகப் போராட்டம் செய்த குறித்த நபரை அப்போது ஒருத்தராலும் ஒண்டும் செய்ய முடியல்ல. ஆனால், நேற்று முன்தினம் நடந்த ஆர்ப்பாட்டத்தில அவரைத் துரத்தித் துரத்தி அடிச்சினம் எண்டால், அங்க கொழும்பில இருக்கிறவற்ற பலம் குறைஞ்சு போய்ச்சுது என்பதுதானே பொருள்.

**வாத்தியார்:** உது தான் சொல்லுறது நாமும் நம்ம பாடுமா இருந்திட்டா ஒரு கரைச்சலும் இல்லை எண்டு.

இந்தாப் பாருங்க யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில இருக்கிற டாக்குத்தர் மாரில ஒரு சிலருக்கு ஜனாதிபதியோட நல்ல தொடர்பாம். அதால ஏனைய மருத்துவர்களும் உத்தியோகத்தர்களும் வாயை அடக்கிக் கொண்டு இருந்தவியள். ஆனால் இனி அப்படி இருக்க மாட்டினம் எண்டு அறிஞ்சன்.

**கங்காணி:** ஓ! ஜனாதிபதியைப் பாதுகாக்கிறதே கஷ்டம் போல இருக்குது. இந்த நேரத்தில ஜனாதிபதியின்ர சின்னுகளைப் பாதுகாக்கிறதுக்கு யார் வரப் போகினம்.

**பண்டிதர்:** யாழ். போதனா வைத்தியசாலை எண்டு சொல்லத் தான் எனக்கு ஞாபகம் வருகுது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில சத்திரசிகிச்சை செய்வதற்கு வசதிகள் இல்லை என்பதால அங்க சத்திர சிகிச்சை செய்யிற பணியை நிறுத்தி வைச்சிருந்தவியள். இந்தச் செய்தியை அறிந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உடனடியாக சத்திர சிகிச்சையை ஆரம்பிக்கத் தேவையான உதவிகளை வழங்கியிருக்கிறார். இதுபோல எங்கட யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையிலும் எத்தனையோ வசதியீனங்கள், வளப் பற்றாக்குறைகள் இருக்குது. இதுபற்றி இந்திய அரசாங்கத்தின் அவதானத்திற்குக் கொண்டு வந்தால் நல்லதல்லோ.

**சாத்திரியார்:** அப்ப எங்கட இந்தியத் துணைத் தூதர் மரியாதைக்குரிய ராகேஷ் நட்ராஜ் அவர்கள் இது விடயத்தில கரிசனை கொண்டு தன்ர பணிக்காலத்தில யாழ்ப்பாணப் போதனா வைத்தியசர்லைக்குச் செய்யக் கூடிய உதவிகளை, வளங்களை வழங்கினால் எங்கட சனங்கள் நன்மை பெறும்.

இது விடயத்தில எங்கட இந்தியத் துணைத் தூதர் அவதானமெடுக்க வேணுமெண்டு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும்.

(சாத்திரியார் இவ்வாறு கூற, குறித்த தீர்மானம் ஆலடியில ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.)

**சிறாப்பர்:** இந்தியத் துணைத் தூதரகத்தைச் சொல்லத்தான் எனக்கு நினைவுக்கு வருகுது. இந்திய அரசாங்கத்தின்ர நிதி உதவியால அமையப் பெற்ற யாழ்ப்பாண கலாசார நிலையத்தின்ர நிர்வாகக் கட்டுப்பாடுகள் யாரிட்டை இருக்கப் போகுது?

**விதானையார்:** என்னைப் பொறுத்தவரை யாழ்ப்பாணக் கலாசார மண்டபத்தை இயக்குவதற்குத் தனியானதொரு இயக்குநர் சபையை உருவாக்க வேணும். இல்லையெண்டால் எல்லாம் அம்போதான்.

**வாத்தியார்:** அப்ப இது விடயத்திலும் யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதரகம் பலருடனும் கலந்து ஆலோசித்து முடிவெடுக்கிறதுதான் நல்லது.

தனித்து ஒரு நிறுவனத்திடம் ஒப்படைத்துவிட, காலத்திற்குக் காலம் மாறுகின்ற அரச நிர்வாகங்களும் அரசியல் தரப்புகளும் தத்தம் விருப்பு வெறுப்புக்களைக் காட்டி நிற்பினம்.

அந்த நிலைமை ஏற்பட்டால், யாழ்ப்பாணக் கலாசார நிலையத்தின்ர பயன்பாடு உச்சம் பெறாமல் போகும்.

**மூப்பர்:** இதுகள் ஒருபுறமிருக்க இப்ப எங்கட நாட்டில என்ன நடக்கப் போகுதாம்.

**சாத்திரியார்:** இஞ்சே மூப்பர் அழிவு காலம் நெருங்கிற்றுது. கொழும்பில போர் வெற்றி விழாக் கொண்டாடுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இயற்கை அதைத் தடுக்க, கடும் மழை-பெரு வெள்ளமாக தென்பகுதியில சன்னதம் ஆடும். இதெல்லாம் ஆட்சித் தரப்புச் செய்த பாவத்தைக் காட்டுகிற அறிகுறிகள் தான்.

இந்தாப் பாருங்க கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கிய சிங்கள மக்களை, அடக்குவதற்காக அவசரகால நிலைமையை ஜனாதிபதி அறிவித்திருக்கிறார் எண்டால் இனி தென்பகுதி ரணகளம்தானே. இப்படிச் சாத்திரியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.



## சிங்கள மக்களை அடக்க அவசரகால நிலைமை

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுத்தும் ஊழ்வினை

நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பது யாருக்கும் தெரியவில்லை.

கைமீறிய காளையைப் போல் பொருளாதாரம் எங்கேயோ சென்று கொண்டிருக்கின்றது.

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியினை இலங்கை சந்தித்திருக்கின்றது.

இவை சரியான திட்டமிடல் எதுவும் இன்றி தமக்குத்தான் எல்லாம் தெரியும். தாம் வைத்தது தான் சட்டம் என்று செயற்பட்டதன் விளைவு என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளாதவரை இந்நிலையில் இருந்து மீள முடியாது.

அதிலும் ஒரு இனத்தை வதைத்து அதில் இன்பம் கண்டதன் கர்மா இப்போது இவர்களைச் சூழ்ந்துள்ளது என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

தமிழ் மக்களுக்கு எதிராய் போரிட்டு தமிழ் மக்களைக் கொன்று குவித்து அவர்களை வென்று விட்டதாய் வெற்றி விழாக் கொண்டாடி அந்த இனத்தை மீளாத் துன்பத்தில் ஆழ்த்திய ஆட்சியாளர்களுக்கு இப்போது எல்லாம் புரிந்திருக்கும் என நாம் நம்புவோமாக.

ஆம், வன்னிப் பெருநிலப் பரப்பில் இறுதி யுத்தம் நடைபெறுகின்றது. அதுவரை ஓங்கியிருந்த விடுதலைப் புலிகளின் கை வீழ ஆரம்பிக்கிறது. உலக நாடுகளின் பூரண ஒத்துழைப்புடன் மும்முனையிலும் தாக்குதல் தீவிரப்படுத்தப்படுகிறது.

பயங்கரவாதம் அழிக்கப்படுகிறது என்ற போர்வையில், பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்படுகின்றனர்.

போரை நிறுத்துங்கள், அப்பாவி உயிர்கள் பறி போகின்றன என தமிழினம் கெஞ்சி மண்டாடியது.

அதை எதையும் கேட்காத ஆட்சியாளர்கள் செவிடன் காதில் ஊதிய சங்காய் இருந்து கொண்டு தமிழினத்தின் தலை மீது குண்டுமழை பொழிந்த வண்ணம் இருந்தனர்.

முடக்கப்பட்ட சிறு பகுதிக்குள் தமிழினம் சிக்குண்டு கிடக்க அதைச் சுற்றி வளைத்து, மூர்க்கத்தனமாய்த் தாக்கினர்.

அதற்கு, நாம் மேற்கொள்வது பயங்கரவாதத்திற்கு எதிரான போர். இங்கு இருப்பவர்கள் அனைவரும் பயங்கரவாதிகளே. மனிதாபிமானப் போரையே நாம் மேற்கொள்கின்றோம் என விளக்கம் கொடுத்தனர்.

அந்தோ பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. இனி இந்த நாட்டில் பயங்கரவாதம் என்று யாரும் பேசிவிட முடியாது. பயங்கரவாதிகள் முழுவதும் சாகடிக்கப்பட்டு விட்டனர் என உலகிற்கு அறிவித்தது இலங்கை அரசு.

ஆனால் அந்த அறிவித்தலுக்காக எத்தனை பெண்களையும் எத்தனை முதியவரையும் எத்தனை பச்சிளம் குழந்தைகளையும் ஈவிரக்கமின்றி கொன்று குவித்தனர் என்பதை எவரும் கருத்தில் எடுக்கவில்லை.

பிரபாகரன் கொல்லப்பட்டார். பயங்கரவாதம் அழிக்கப்பட்டு விட்டது என அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஜனாதிபதியைச் சந்தித்து

> “முன்னை இட்ட தீ முப்புறத்திலே
> பின்னை இட்ட தீ தென்னிலங்கையில்
> அன்னை இட்டது தீ அடிவயிற்றிலே
> யானுமிட்ட தீ மூழ்க மூழ்கவே”

உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பு தென்னிலங்கையில் விழாக்கோலம் பூணுகிறது. தென்னிலங்கை மக்கள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை முதன்மைப்படுத்துகின்றனர்.

இதை ஏற்றுக் கொள்ள முடியாத ஆட்சியாளர்கள் பொன்சேகாவை குற்றவாளியாகக் காட்டி சிறையில் அடைக்கின்றனர்.

பயங்கரவாதத்தை வெற்றி கொண்டதாய் அறிவித்த இராணுவத் தளபதி குற்றவாளிக் கூட்டில் நிறுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றார்.

இது தமிழினத்திற்கு ஆட்சியாளர்கள் மேற்கொண்ட அநியாயத்திற்கான இறைவனின் தீர்ப்பாக தமிழ் மக்கள் கருதினர்.

அதன் பின்னர் ஆட்சியாளர்கள் நடந்து கொண்டவை மிகவும் மோசமானதாகவே அமைந்தன.

தமிழினத்திற்கான எந்த உரிமைகளையும் தருவதற்கு அவர்கள் முன்வரவில்லை.

மாறாக தமிழ் மக்களின் பண்பாடு, கலாசாரத்தை சிதைக்கும் வகையில் அவர்கள் செயற்பட்டனர் என்பதே உண்மையானது.

அதிலும் தமிழினத்தின் அடிப்படை உரிமைகளைக் கூடத் தருவதற்கு அவர்கள் தயாராக இல்லை.

எதற்கும் தடை விதிக்கின்ற செயற்பாடுகளையே முன்னின்று செயற்படுத்தினர். அதை மீறினால் பயங்கரவாதத்தை தூண்டுவதாய் விசாரிக்கப்பட்டதுடன் பாரிய உள நெருக்கீட்டைக் கொடுக்கும் செயற்றிட்டத்தில் மிகத் தாராளமாகச் செயற்பட்டனர்.

எங்கெல்லாம் பௌத்தத்தை முன்னிலைப்படுத்த முடியுமோ அங்கெல்லாம் அதை தாராளமாகச் செய்தனர்.

சிவ சின்னங்களை எடுத்து விட்டு அங்கு பௌத்த சின்னங்களைப் பொறிப்பது மட்டுமல்லாமல் தொல்பொருள் திணைக்களம் என்ற போர்வையில் நாடு முழுவதிலும் பௌத்த சின்னங்களை முன்னிலைப்படுத்தி வரலாற்றில் மாற்றங்களை ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொண்டனர்.

இவை தமிழ் மக்களுக்கு எதிரானதாக அமைந்ததால் பெரும்பான்மைச் சிங்களவர்கள் வரவேற்றனர். அது ஆட்சியாளர்களுக்கு இன்னும் குஷியைக் கொடுத்தது.

எதுவும் செய்ய முடியாத கையறு நிலையில் இருந்த தமிழினம் கடவுளிடம் பாரத்தைக் கொடுப்பதைவிட வேறு எதையும் மேற்கொள்ளவில்லை.

அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்பது பொய்த்துப் போகவில்லை. ராஜபக்ஷக்களின் ஆட்சி மீது பெரும் பான்மைச் சிங்கள மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. அத்தியாவசியப் பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை. அதிலும் சமையல் எரிவாயு, எரிபொருள், பால்மா என்பன கைக்கெட்டாத தாய் அமைந்தன.

இதனால் சிங்கள மக்கள் தங்கள் கதாநாயகர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்ததுடன் தமிழ் இனத்துக்காகப் போராடிய பிரபாகரனை நினைவுகூரத் தலைப்பட்டனர்.

அண்மையில் எரிவாயுவிற்கு வரிசையில் நின்ற சிங்களப் பெண்மணி ஒருவர் ஊடகத்திற்கு கருத்துத் தெரிவிக்கும் போது, “பிரபாகரன் ராஜபக்ஷக்களிடம் இருந்து இந்த நாட்டை மீட்கவே போரிட்டார். அவர் இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது” என்று கூறியிருந்தார்.

இதைவிட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் பிரபாகரனின் படத்தை பதாகையிட்டு பிரபாகரன் பயங்கரவாதி அல்ல என்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

கடந்த வியாழக்கிழமை எரிபொருளுக்கு காத்திருந்த மக்கள் அது கிடைக்கவில்லை என விரக்தியடைந்து ஜனாதிபதிச் செயலகத்தை நோக்கி ஊர்வலமாய் சென்று ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதுடன் கோட்டாபய ஆட்சி ஒழிக என்று கோஷமிட்டனர். அதை அடக்க முனைந்த பொலிஸாரைத் தாக்கவும் செய்தனர்.



அது கலவரமாக மாறி இராணுவ வாகனம் மற்றும் பொலிஸ் ஜீப் என்பன தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இதில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருந்தனர்.

ஆட்சியாளர்களுக்கு எதிரான தென்னிலங்கை மக்களின் எதிர்ப்புக்கள் பொருளாதார வீழ்ச்சியினால் ஏற்பட்டது என பொருளாதார வல்லுநர்கள் கூறிக் கொண்டாலும் இவை தமிழ் மக்களுக்கு ஆட்சியாளர்கள் மேற்கொண்ட பாவத்திற்கான கர்மா அவர்களைத் துரத்துகின்றது என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

“முன்னையிட்ட தீ முப்புறத்திலே பின்னை இட்ட தீ தென்னிலங்கையில் அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே யானும் இட்ட தீ மூழ்க மூழ்கவே” என்ற பட்டினத்தார் பாடல் சகலருக்கும் பொருந்துவதாக.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மச்சு பிச்சு (பெரு)



தென் அமெரிக்க பகுதிகளில் முன்னேறிய இனமாக இருந்த ஸ்பானியர்கள், அருகிலிருந்த சிறிய அரசுகளை ஆக்கிரமித்து அங்கிருந்த பூர்வீகக் குடிமக்களை விரட்டி அடித்தனர். அவர்களது கண்களுக்கு புலப்பட்ட இன்காக்களின் நகரம் மிக பிரம்மாண்டமானதாய், பாதுகாப்பானதாய் இருந்தது. இன்காக்களின் இரு பிரிவுகளுக்குள் நடந்த அதிகாரப்போர் ஸ்பானியர்கள் உள்ளே நுழைய எளிதாக வழி வகுத்து விட்டது. எனவே அவர்களை விரட்டிவிட்டு இன்காக்களின் வீடுகளை கோட்டைகளை ஸ்பானியர்கள் ஆக்கிரமித்தனர்.

இன்காவின் கடைசி அரசன் சந்தடியின்றி, எங்கு சென்றான் என்று தெரியாதபடி கோட்டையை விட்டு ஓடிப்போனான். இதன் காரணமாக இன்காக்கள் காடுகளுக்குள் சென்று வில்காபம்பா என்ற இடத்தில் தஞ்சமடைந்தனர். வில்காபம்பாவிலும் தங்கள் வாழ்விடங்களை சிறப்பாக அமைத்துக்கொண்டனர்.

1875 இல் ஹவாய் தீவில் பிறந்த ஹிராம் பிங்கம் என்பவர் பிற்காலத்தில் குறிப்பிடத்தக்க செல்வந்தராக உயர்ந்தார். வரலாற்று ஆய்வுகளிலும் சுற்றுப்பிரயாணங்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட பிங்காம், அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் நூலகப்பிரிவில் பணியாளராக சேர்ந்தார்.

அங்கு தென் அமெரிக்க தொகுப்பு ஒன்றை உருவாக்கும் பணி அவருக்குத் தரப்பட்டது. அதற்கு முன் தென் அமெரிக்கா பற்றிய எந்த முறையான ஆய்வும் அந்த பல்கலைக்கழகத்தில் இல்லை. எனவே பிங்காம் பல நூல்களை தேடித்தேடி வாசிக்க வேண்டியிருந்தது. தென் அமெரிக்காவின் இணையற்ற போராளி என அறியப்பட்ட சைமன் பொலிவார் பயணித்த நாடுகளில் எல்லாம் தானும் பயணிக்க ஆசைப்பட்டார் பிங்காம்.

போஸ்டன் வழக்கறிஞர் வில்லியம் ப்ரெங்காட் என்பவர் மெக்சிகோவிலும் பெருவிலும் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்கள் குறித்து எழுதிய கட்டுரைகளை பிங்காம் வாசிக்க நேர்ந்தது. 1906 ஆம் ஆண்டு தனது முதல் பயணத்தைத் தொடங்கினார் பிங்காம்.

ஆனால் அந்தப் பயணம் பெரும்பாலும் வேட்டையாடுதல் அனுபவத்துக்காகவும், கொண்டாட்ட மனோபாவத்துக்காகவுமாக இருந்தது. அமெரிக்கா திரும்பிய பிங்காம் யேல் பல்கலைக்கழகத்தில் இணைந்தார். அங்கு அவருக்கு கிடைத்த ஆய்வுக்கட்டுரைகள் அவருக்குப் புதிய பரிமாணத்தைத் தந்தது. மீண்டும் அவர் தனது பணத்தை 1911 ஆம் ஆண்டு தெடாங்கினார். ஆய்வு நோக்கில் திட்டமிடப்பட்டாலும் பல்கலைக்கழகத்திலிருந்து எந்த நிதி உதவியும் கிடைக்கவில்லை. அவருடன் பணியாற்றிய நண்பர்கள் சிலர் பொருளாதார உதவியும், உடன் வர சம்மதத்தையும் தந்தனர்.

கார்லோஸ் ரொமிரோ என்கிற பெரு தேசம் பற்றி அதிகம் ஆய்வு செய்த மனிதரை பிங்காம் சந்தித்தார். இன்காக்களின் கடைசி சில நபர்களில் ஒருவரான திது குனியாஸ் என்பவரிடமிருந்து பெறப்பட்ட சில தகவல்களைப் பற்றி அவர் தான் பிங்காமிடம் தெரிவித்தார்.

(தொடரும்...)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2549

Search for people, places and things

### சயந்தன்


செல்போன் ரீப்பேராகி சர்வீஸ் சென்டருக்கு கொண்டு போறது



உடம்பு சரியில்லாத குழந்தைய ஆஸ்பத்திரிக்கு கொண்டு போற மாதிரி 'என்னாச்சோ ஏதாச்சோ' என்று பீலிங்காவே இருக்கு

### சாளினி

எல்லா மிருகங்களையும் கூண்டிற்குள் அடைத்த மனிதன்



கொசுவிற்குப் பயந்து வலைக்குள் புகுந்து கொண்டான்

### கனிஸ்ரன்

கல்யாண வீட்டில்
செருப்பை தொலைத்தவன்
எழுதிய கவிதை...!!!
"உள்ளே ஒரு ஜோடி
சேர்ந்து விட்டது"
"வெளியே ஒரு ஜோடி
தொலைந்து விட்டது"

### டிசானா



அக்கால எமது ஆசிரியர்கள் அடித்த அடியை மனித உரிமையில் முறையிட்டிருந்தால் அவர்கள் இன்றும் சிறையில் இருந்திருப்பார்கள்...
அவர்கள் அவ்வாறு அடித்து எம்மை திருந்தவில்லை என்றால் நாம் இன்னும் சிறையில் இருந்திருப்போம்

### சஞ்சீவன்

சந்துரு : டாக்டர் எனக்கு தூக்கத்தில் திட்டுற வியாதி இருக்குன்னு சர்டிபிகெட் தாங்க

டாக்டர் : எதுக்கு?

சந்துரு : என் மனைவியைத் திட்டத்தான்

டாக்டர் : இப்பத்தான் உங்க மனைவி தூக்கத்திலே அழக்கிற வியாதி இருக்குன்னு சர்டிபிகெட் வாங்கிக்கிட்டு போனாங்க

### மிதுனா

குழந்தையாக இருக்கும் போது தூங்கு தூங்கு என்று தொட்டிலில் போட்டு ஆட்டுவது




வளர்ந்த பின் தூங்கினால் சோம்பேறி, தண்டச்சோறு என்று திட்டுவது


நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடிமையின் உடம்பில் இரத்தம் எதற்கு... என்ற பாடல் பற்றி?



அரசிற்கு எதிரான போராட்டங்கள் தென்னிலங்கையில் வலுப்பெற்று விட்டனவே?

**மகேஸ்வரன் — வரணி**

**திருவிழாவில் உபயகாரர்கள் தெர்ப்பை வாங்குவது பிரச்சினையாக உள்ளதே. என்ன செய்ய முடியும்?**

தெர்ப்பை என்றாலே பிரச்சினை தான். அதிலும் நான் பெரிது நீ பெரிது என்ற அகங்காரம் கொண்டவர்கள் கையில் தெர்ப்பை போட்டால் எப்படி இருக்கும்?
மும்மலங்களையும் களையும் ஒரு குறியீடே ஆலயத்துள் மேலாடை களைவது. இதை புரியாமல் வீழ்ந்து வீழ்ந்து கும்பிட்டு பயன் என்ன?
அடுத்தவர் 10 கூட்ட மேளம் பிடித்தால் இவர் 15 கூட்டம் பிடிப்பதும் மற்றவர் கோயில் எல்லை வரை மின்குமிழ் கட்டினால் இவர் தன் வீட்டு வாசல் வரை கட்டுவதும் கடவுளைத் தேடும் வழியாக அமைந்து விடாது.
இவர்களைப் பிடித்து நாலு சாத்துச் சாத்தினால் எல்லாம் சரி வரும்.

**தாரா — வதிரி**

**எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கும் நிற்கும் வரிசை நீண்டு கொண்டே செல்கிறதே வியாசரே?**

படையப்பா படத்தில் ரஜினிக்காக தானாகச் சேர்ந்த கூட்டம் போல எரிபொருளுக்கும் எரிவாயுவுக்குமான வரிசை அனுமன் வாலாய் நீண்டு சென்று கொண்டே இருக்கிறது.
அதில் என்ன விசயம் எனின் இந்த வரிசையின் நீளம் ஜனாதிபதி செயலகம் வரை சென்றபோது அங்கு மின்சாரத் துண்டிப்பு இல்லை.
அட நமக்கு மின்சாரத் துண்டிப்பு இங்கு தாராளமாய் மின்சாரமோ என்ற கோபம் பெரும் பிரளயமாய் மாறியிருக்கிறதே.
இறைவா இதற்கொரு முடிவே இல்லையா?

**சிவா — கொக்குவில்**

**இலங்கையின் பொருளாதார நிலை பற்றி குடுகுடுப்பைக்காரனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமா?**

அந்தாளின்ர குடுகுடுப்பை பிஞ்சு போச்சு தெண்டு அந்தாள் அதை வாங்க கடை கடையா ஏறி இறங்கித் திரியுது.
இந்த நேரம் பார்த்து இதைப்போய் அந்தாளிட்டைக் கேட்டால் கடுப்பாகி நமக்கு பில்லி, சூனியம் ஏதும் ஏவி விட்டு விடுவார்.
நாட்டு நிலையைத்தான் பார்க்கும் போதே தெரிகிறதே இனி மீள்வதற்கு ஒரு வழியும் இல்லை என்று.
பேசாமல் மூடிட்டு படுப்போமே

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**021 567 1532**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**திருவரதராசா — வவுனியா**

**மக்களை வாழ வைக்கத் தானே அரசுகள்?**

அரசு என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும்.
ஆனால் இப்போது அப்படி இருக்கிறதா என்ற கேள்வி எழும் அல்லவா?
அந்தக் கேள்விக்கு பதில் இவ்வாறாக அமையும்.
தனது நாட்டின் சொந்த மக்களையே கொன்று குவித்துவிட்டு அவர்களை கொன்ற நாளை வெற்றி விழாவாகக் கொண்டாடுபவர்கள் இருக்கும் வரை மக்களுக்கான ஆட்சியாய் எதுவும் அமைந்து விடாது.
அதுசரி தற்போது தென்னிலங்கை மக்கள் அரசிற்கு எதிராக கொதித்தெழுந்திருக்கிறார்களாமே. சபாஸ் சரியான போட்டி.

**தேசிது — தெல்லிப்பழை**

**அடிமையின் உடம்பில் இரத்தம் எதற்கு... என்ற பாடல் பற்றி?**

அந்தப்பாடல் வரிகளைப் போன்று ஒரு காலத்தில் தமிழன் வாழ்ந்தான்.
இன்று அவை அனைத்தும் தவிடு பொடியாகிப் போக ஆட்சியாளர்களுக்கு அடிவருடிகளாக தமிழ் உணர்வு போராட்டங்களுக்குள் நுழைந்து குழப்பம் விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள்.
என்ன சொல்வது. தன் இனத்தின் விடுதலைக்காக வெடித்துச் சிதறியவரும், நஞ்சருந்தி மடிந்தவரும், நெஞ்சில் குண்டு துளைத்ததற்குப் பின்பும் எதிரியை நோக்கி சுட்டபடியே மடிந்து போனவரும் வாழ்ந்த இந்த பூமியில் வாழ்கின்றோம் என்ற நிம்மதியுடனும் பெருமையுடனும் வாழும் வரை வாழ்ந்து விட்டுப்போவோம்.

**சுதன் — குப்பிழான்**

**வாங்கும் கடனுக்கு வட்டி கட்டுவதற்காகவே மீண்டும் கடன் வாங்கும் இலங்கை அரசு தமிழரின் சுயாட்சியை வட்டியில்லாமல் அங்கீகரிக்குமா?**

சமூக வலைத்தளத்தில் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த அருமையான பதிவொன்று. அதை அப்படியே உங்களுக்குத் தருகின்றேன்.
இந்தியாவின் சென்னைக்கு மிகமிக அருகில் நான்கு பக்கமும் கடலாலும் கடனாலும் சூழப்பட்ட 65 ஆயிரத்து 610 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட சகல வளங்களும் கொண்ட காணி உடன் விற்பனைக்கு உண்டு. சீனாவைத் தவிர வேறு யாரும் தொடர்பு கொள்ள முடியும்.
தொடர்புகளுக்கு 077 XXX XXXX

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**அரசிற்கு எதிரான போராட்டங்கள் தென்னிலங்கையில் வலுப்பெற்று விட்டனவே?**

இந்த அரசிற்கும் தமிழ் மக்களாகிய எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.
இந்த அரசு பெரும்பான்மைச் சிங்கள மக்களால் கொண்டு வரப்பட்டது. அதுவும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்த அரசு.
இப்போது அந்த அரசிற்கும் அவர்களை ஆட்சிக்குக் கொண்டு வந்த பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் இடையே நடக்கும் குடும்பச் சண்டை இது.
மற்றவர்கள் குடும்பச் சண்டையில் தலையிடுவது அவ்வளவு நாகரிகமான செயல் அல்லவே.
அதனால் கண் குளிரப்பார்ப்போம்.
மகிழ்ச்சி தாங்கவில்லை என்றால் வீட்டுக்குள் ஓடிப்போய் கதவை இறுகப் பூட்டிய பின்னர் விசில் அடித்து ஆர்ப்பரிப்போம்.

**சிவாஸ் — யாழ்ப்பாணம்**

**மின்சாரத் துண்டிப்பு ABCD... என வலயம் நீண்டு செல்கிறதே?**

மூன்று மணித்தியாலத்தில் இருந்த மின் துண்டிப்பு மிக நீண்ட காலமாக 7 1/2 இல் இருந்தது. அந்த 7 1/2 தான் அரசிற்கு 7 1/2 ஆக மாறியிருக்கிறது.
முதலில் A,B,C... இப்படி ஆங்கில எழுத்துக்களின் குறியீடு எந்த வலயம் என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.
A வலயம் என்றால் எது என்றே தெரியாத மக்கள் மின்சாரத் துண்டிப்பு பற்றி என்னத்தைச் செய்வது.
மக்களின் நலன் சார்ந்து சிந்திப்பவர்கள் எனின் முதலில் அதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.
நாட்டில் வாழும் அனைத்து மக்களும் BSc முடித்தவர்கள் இல்லை என்பதை சம்பந்தப்பட்டவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியே ஆட்சியின் உயிர்.
நடுநிலைமையே நீதியின் உயிர்.
– ஜஸ்டினியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களுக்குச் செய்த பாவம் திரண்டெழுந்து தாக்குகிறது!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்து ஒட்டுமொத்த இலங்கை மக்களும் போராடத் தலைப்பட்டுள்ளனர்.

இதனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் அதிர்ந்து போயுள்ளனர்.

கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவில் சிங்கள மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டைச் சுற்றி வளைத்து வசைபாடி, கல்லெறிந்து மிக மோசமாகத் தூற்றினர்.

இந்தச் சம்பவம் ஜனாதிபதி கோட்டாபயவுக்கும் ராஜபக்ஷ குடும்பத்திற்கும் சந்ததி சந்ததியாகப் போதும் எனலாம்.

இவையொரு புறமிருக்க, ஐயா! உமது ஆட்சியில் அமைச்சர்களாக இருப்பதைவிட அந்தப் பதவிகளில் இருந்து விலகுவது உத்தமம் என்றவாறு அமைச்சர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்து சிங்கள மக்களின் திட்டல்களில் இருந்து தப்பி வருகின்றனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பலம் எனக் கருதப்பட்ட முப்படையினரும் பொலிஸாரும் இப்போது நாட்டின் இன்றைய மிக மோசமான நிலைமைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது குடும்பமுமே காரணம் என்று சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமைகள் கோட்டாபய ராஜபக்ஷவால் ஜீரணிக்க முடியாதவை. இதனால் அவர் மிகுந்த கடுப்படைந்துள்ளார்.

ஆனால், என்ன செய்வது நாடு முழுவதும் எதிர்த்து நிற்கும் போது யார்தான் என்ன செய்ய முடியும்?

இங்குதான் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்ற தத்துவம் உணரப் படுகிறது.

ஆம், தமிழ் மக்களைக் கொன்றொழித்த பாவம் சும்மா விடுமா என்ன? வன்னிப் பெருநிலப் பரப்பில் நடத்திய யுத்தம், அதனால் தமிழ் மக்கள் சுருண்டு போன துயரம், இந்த அவலத்தில், ஓர் ஆட்சித் தலைவனாக அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் இனிப்புகளை வழங்கி கேக் வெட்டி யுத்த வெற்றியைக் கொண்டாடினர்.

உண்மை. ஆட்சித் தலைவனுக்குரிய எந்தத் தர்மத்தையும் பின்பற்றாமல், அவர்கள் அன்று நடத்திய அதர்மம் இன்று சூழ்ந்து கொண்டுள்ளது.

இதன் காரணமாக ஆட்சித் தலைவர்கள் வீதியில் இறங்க முடியாத அளவிற்கு நிலைமை வந்துவிட்டது.

ஆம்,சிங்கள மக்கள் ராஜபக்ஷ குடும்பத்தை அடியோடு வெறுக்கின்றனர். அவர்கள் இனி இவர்களை மன்னிக்கப்போவதில்லை.

ஆக, நாட்டைவிட்டுத் தப்பியோடுவதைத் தவிர வேறு வழியேதுமில்லை என்ற கையறு நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெறுங்கையோடு நிற்கிறார்.

உலகமும் அவரை ஓரங்கட்டியுள்ளது. இனி எக்காலத்திலும் அவர்களுக்கு இந்த நாட்டில் மரியாதை ஏற்படுவதற்கான வாய்ப்பு அறவே இல்லை எனலாம்.

# இணைய சேவை பாதிப்பால் அந்நிய செலாவணி சரிவடையும்

## முன்னாள் பிரதமர் ரணில்

(கொழும்பு)

டீசல் தட்டுப்பாடு காரணமாக இணைய சேவையில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் நாட்டின் அந்நிய செலாவணியை மேலும் சரிவடையச் செய்யும்.

எனவே மின் உற்பத்தி நிலையங்களைப் போன்று, இணைய சேவையை வழங்கும் கோபுரங்களுக்கான (டவர்) டீசலை வழங்குவதற்கும் முன்னுரிமையளிக்கப்பட வேண்டும் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று இணைய சேவை தொடர்பில் பாரிய பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. இணைய சேவைகளை வழங்கும் கோபுரங்களுக்கு (டவர்) டீசல்வழங்கப்படாமையின் காரணமாக பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

அன்று அமெரிக்காவின் துணை ஜனாதிபதி அல்கோவுடன் ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டபோது இவ்வாறானதொரு வீழ்ச்சியை நாம் எதிர்பார்க்கவில்லை. தற்போது இரு பிரதான காரணிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

முதலாவதாக இந்த கோபுரங்களுக்கு டீசல் வழங்கப்பட வேண்டும். மின்உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கப்படும் முன்னுரிமையைப் போன்று இவற்றுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

நாம் கணனி சேவைகளுக்கு முன்னுரிமையளித்தோம். இதனால் அந்நிய செலாவணியை ஈட்டிக் கொள்வதிலும் சாதகமான பிரதிபலன் கிடைக்கப் பெற்றது. தற்போது இந்த சேவை வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனால் அந்நிய செலாவணி மேலும் குறைவடையும். அவ்வாறு குறைவடைந்தால் அந்த சந்தையை மீளவும் பெற்றுக் கொள்ள முடியுமா என்பது கேள்விக்குரியது. எனவே அரசாங்கம் இது தொடர்பில் துரித நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்றுள்ளது. (ம)

# காபந்து அரசை நியமித்தால் அமைச்சுப் பதவியை துறப்பேன்

## அமைச்சர் நாமல்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில், அடுத்த சில நாட்களில் காபந்து அரசாங்கத்தை நியமிப்பதற்கு பாராளுமன்றம் அனுமதித்தால் அரசியல் ஒற்றுமைக்காக தனது அமைச்சுக்களை தியாகம் செய்யத்தயாராக உள்ளதாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கம் எடுத்துள்ள முடிவுகள் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது,

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில், இது தேர்தலுக்குச் செல்வதற்கான நேரம் அல்ல. மாறாக காபந்து அரசாங்கம் நியமிக்கப்பட்டால், பதவி விலகி அரசியல் ஒற்றுமைக்கு வழி வகுக்கும்.

தற்போதைய உடனடித் தேவை என்பது பொருளாதாரமும் ஐக்கியமும் ஆகும்.

இந்நிலையில் எரிபொருள் தட்டுப்பாடு, மின் நெருக்கடி மற்றும் எரிவாயு தட்டுப்பாடு போன்ற விடயங்கள் அவசரமாக தீர்க்கப்பட வேண்டியதுடன், நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு அரசியல் ஒற்றுமையும் தேவையாகும்.


ஆகவே இதை மனதில் வைத்துக்கொண்டு அரசியல் ஒற்றுமைக்காக காபந்து அரசாங்கம் அமைந்தால் எனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவேன் என தெரிவித்துள்ளார். (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை 04 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ் பிரதேசத்தில்** அக்கரை, கெருடாவில், மயிலியதனை, பொக்கணை, சந்நிதி கோவில், சிதம்பரா கல்லூரி, தொண்டமனாறு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** கூமரசங்குளம் மாதா கோவிலடி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

## எப்போது பாவ மன்னிப்பு கிடைக்கும்?



எப்படிப் பட்ட பிரச்சினைகள் இருந்தாலும், சில காரியங்களை புரிய வைத்த பிறகு, பாவம் மற்றும் அந்த சிக்கலில் இருந்து அவர் நிச்சயம் விடுதலை தருவார். அந்த விடுதலை தான் நிரந்தரமானது.

ஆனால் ஜெபத்தில் அளித்த உறுதியை எந்த அளவுக்கு அவன் காத்துக் கொள்கிறானோ, அந்த அளவுக்கு அவனுக்கு பிரச்சினைகளில் இருந்து அற்புதமாக விடுதலை கிடைக்கும். ஒரு பிரச்சினையில் அல்லது நோயில் இருந்து நிரந்தர விடுதலை பெறுவது அவனவன் கையில்தான் இருக்கிறது. விடுதலையைத் தர இறைவன் எப்போதும் தயாராக உள்ளார். அவரைத் தேடி எந்தப் பகுதிக்கும் செல்ல வேண்டாம். வேறு நபர்களையும் நாடிச் செல்ல வேண்டாம்.

உங்களுக்கு உதவி செய்ய யாரையாவது இறைவன் அனுப்புவார். வேதப் புத்தகம் முழுவதும் அவரது வாக்குறுதிகள் உள்ளன. அவற்றை நம்பி ஜெபித்தால் போதும்.

சிலர் வெளியில் சொல்ல முடியாத பாவங்களைச் செய்துவிட்டு அவதிப்படுவது உண்டு. இப்படிப் பட்டவர்களையும் இறைவன் இயேசு தன்னிடத்தில் வரும்படி அழைப்பு விடுக்கிறார் (மத்.11:28).

துரோகம் போன்ற சில குற்றங்களை செய்திருந்தால், சம்பந்தப்பட்டவரிடம் சென்று மன்னிப்பு கேட்க வேண்டியது இருக்கும். அதற்கான காலம், நேரத்ததை இயேசு காட்டி பிரச்சினை மேலும் உருவாகாதபடி செய்வார்.இதற்கு காத்திருந்து இருக்க வேண்டும்.

ஆனால் சிக்கல்கள் மூலம் இறைவன் விடும் அழைப்பை (பாவமற்ற வாழ்க்கை வாழ) ஏற்காமல், பிரச்சினைகள் மட்டும் தீருவதற்காக செய்யும் ஜெபம் அருவருப்பானது (நீதி.28:9).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகால சட்டத்தை அரசு அமுல்படுத்தி மீண்டும் மீண்டும் தவறிழைக்கிறது

## செல்வம் எம்.பி குற்றச்சாட்டு

(மன்னார்)

**நாட்டில் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தி இந்த அரசு மீண்டும் தவறிழைத்து உள்ளது என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

அவர் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அவசரகால சட்டம் ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. முப்படையினருக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டு ஜனநாயக ரீதியில் போராடுகின்ற மக்களை அடக்க ஒடுக்க இச்சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் மேலும் மேலும் தவறிழைத்துக்கொண்டு இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உண்மையில் மக்களின் அன்றாட பிரச்சினை,மக்கள் அன்றாடம் எதிர் நோக்குகின்ற துன்பங்களை பிரதிபலிக்கும் வகையில் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

இந்த நிலையில் அரசு மீண்டும் தவறிழைக்கின்றது.

அவசர காலசட்டத்தை அமுல்படுத்தி மீண்டும் மக்களை அடக்க,ஒடுக்க நினைக்கின்ற முறையை கையாள நினைக்கின்ற செயற்பாட்டை ஜனாதிபதி செய்ய துணிகின்றார். அதை வன்மையாக கண்டிக்கின்றோம்.அதனை முழுமையாக வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த நாட்டிலே மக்களை காப்பாற்ற முடியாத அரசு,இந்த மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத அரசு நாளாந்தம் மக்கள் படுகின்ற துன்ப துயரங்களை கருத்தில் கொள்ளாத அரசு இந்த அவசர கால சட்டத்தை அமுல்படுத்தி நிம்மதியாக இருந்து விடலாம் என்று நினைத்து விட முடியாது. மக்கள் கிளர்ந்தெழுந்து உள்ளார்கள். இதனூடாக போராட்டங்களை தடுத்து நிறுத்தி விடலாம் என்று நினைத்தால் அது பகல் கனவு.

மக்கள் அரசுக்கு எதிராக தற்போது வீதிக்கு இறங்கி உள்ளார்கள். மக்களின் போராட்டம் தொடரும்.எனவே ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகால சட்டம் மீளப்பெறப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை என அவர்தெரிவித்தார்.(4-6-285)



# 'அம்மா' என சிறுவனின் நெஞ்சில் சூடு வைத்த தாய்

(கரணவாய்)

வடமராட்சியில் பாடசாலை மாணவன் ஒருவனின் நெஞ்சில் குறித்த மாணவனின் தாயார் 'அம்மா' என சூடு வைத்துள்ளார்.

விடயம் தொடர்பில் குறித்த சிறுவனின் உறவினர்கள் வடமராட்சி பிரதேச செயலக சிறுவர் பராமரிப்பு பிரிவில் முறையிட்டுள்ளனர். (4-6-60)

# நூல் வெளியீடு

(குப்பிழான்)

தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தையும், ஈழத்தின் பண்பாட்டு விழுமியங்களையும் பிரதிபலிக்கும் மாட்டு வண்டிச் சவாரி பற்றிய நூல் இன்று ஞாயிற்றுக்கிழமை சிட்னியில் வெளியிடப்படவுள்ளது.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைப் பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய "ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்" எனும் குறித்த நூல் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் 31 ஆம் நாள் நினைவு வணக்க நிகழ்வாக சிட்னி முருகன் கோயில் கலாசார மண்டபத்தில் இந்நூல் வெளியீடு நடைபெறும். (4-6-18)

# வவுனியாவில் கோர விபத்து மூவர் மருத்துவமனையில் ஒருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா ஏ9 வீதி கொக்குவெளி இராணுவ முகாம் அருகே நேற்று காலை ஹயஸ்ரக வான் - முச்சக்கரவண்டி நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் கனடா நாட்டு பிரஜை உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற ஹயஸ்ரகவாகனம் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து எதிர்த்திசையில் வவுனியா நகரிலிருந்து நொச்சிமோட்டை நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியுடன் நேருக்கு நேர் மோதியே தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் முச்சக்கர வண்டி சாரதியான 43 வயதுடைய குடும்பஸ்தர் மற்றும் முச்சக்கர வண்டியில் பயணித்த கனடா நாட்டு பிரஜையான 55 வயதுடைய நபர் ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக சிகிச்சைக்காக முச்சக்கர வண்டி சாரதி தீவிர அவசரசிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.



சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பிலான் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் ஹயஸ்ரக வாகனத்தின் சாரதியினை பொலிஸார் கைது செய்தனர். (4-6-250)

கிளிநொச்சியில் .76 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப் பட்டு வருகின்ற பஸ் தரிப்பு நிலையத்தின் நிர்மாணப் பணிகள் இறுதிக் கட்டத்தினை அடைந்துள்ள நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கண்காணிப்பு விஜயம் ஒன்று நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது. (படம்:- தேவானந்தன்)




# மரண அறிவித்தல்



**கலாபூஷணம் அமரர். சின்னத்துரை நவரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

அன்னையின் மடியில் 24.09.1937 01.04.2022

கரணவாய் கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர் கலாபூஷணம் **சின்னத்துரை நவரத்தினம்** அவர்கள் நேற்று முன்தினம் (01.04.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஜயா மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், மற்றும் சுசீலாதேவியின் அன்புக் கணவரும், ஜெயகௌரி (ஆசிரியை யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஜெயதர்சினி (முன்னாள் தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்திய சாலை- தற்போது ஜேர்மனி), ஜெயபாரதி (ஆசிரியை யா/ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வமோகன், (ஆசிரியர் யா/செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை), சிவசங்கர் (கட்டட ஒப்பந்தக் காரர்), கௌசிகன் (ஆசிரியர் யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்), ஆகியோரின் அன்பு மாமனாரும், துவாரகன், பவ்யசங்கரி, நிருஜா, நீரஜா, சாகித்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தங்கமணி, அன்னலட்சுமி, முத்துலட்சுமி மற்றும் சீவரத்தினம், நாகேஸ்வரி, குணரத்தினம், மகாலட்சுமி, ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான விபுதராஜா, சிவபுண்ணியம் மற்றும் பஞ்சரத்தினம், பஞ்சநாதன், பஞ்சலிங்கம் மீனகுமாரி, வதனகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0771265349 (கௌ.ஜெயபாரதி மகள்)
0770664616 (செ.ஜெயகௌரி மகள்)
4917661123282 (சி.ஜெயதர்சினி மகள்)
0776280157 (கௌசிகன் மருமகன்)
0776153548 (செல்வமோகன் மருமகன்)

தகவல்
குடும்பத்தினர்,
துவாரகை
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரடங்கு...

ங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

ஊரடங்கு நடைமுறைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்று மாலை கருத்து தெரிவித்தபோதே அரசாங்க அதிபர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் மேலும் தெரிவிக்கையில், இன்று (நேற்று) மாலை 6 மணி முதல் திங்கட்கிழமை காலை 6 மணி வரை நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்நிலையில் தேவையற்ற நடமாட்டங்களை தவிர்த்து ஊரடங்கு காலத்தில் வெளியில் நடமாடாமல் இருப்பது சிறப்பானது.

மிக மிக அத்தியாவசியமான தேவைகள் மற்றும் இதர அத்தியாவசியமான விடயங்களை பொறுத்தவரையில் அவர்கள் அந்தந்த பகுதியில் உள்ள பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு அதன் ஊடாக கிடைக்கின்ற அறிவித்தலின்படி செயற்படலாம்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களை உரிய அறிவித்தல்கள் எங்களுக்கு முறையாக கிடைத்த பிற்பாடு பொதுமக்களுக்கு தெரிவிப்போம். அதுவரை பொதுமக்கள் மிகவும் அமைதி காத்து ஊரடங்குச் சட்டத்தை அனுசரித்து நடக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

(ம-33,104)

## அத்தியாவசிய...

யும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய சேவை உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்களில் கடமையாற்றுபவர்கள் தமது அடையாள அட்டைகளை முன்வைத்து கடமைக்கு சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார். (ம)

## தொடர்புடை...

அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த அறிவிப்பை சிவில் விமான போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் வெளியிட்டுள்ளார்.

விமான நிலையங்களிலிருந்து வெளியேறுவோர், விமான நிலையங்களுக்குப் பயணிப்போர் பயணச்சீட்டு, விமானக் கடவுச்சீட்டு என்பவற்றை அனுமதிப் பத்திரங்களாகப் பயன்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## அமைதியான...

அமெரிக்க தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக வெளிப்பாட்டிற்கு இது அவசியம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இலங்கையின் நிலைமையை தான் உன்னிப்பாக கவனித்து வருவதாக அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ம)

## அஞ்சினார்...

6 மணி தொடக்கம் திங்கட்கிழமை காலை 6 மணி வரைக்கும் நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம)

## பொது...

6.00 மணி வரை, பாதுகாப்பு அல்லது பொதுப் பாதுகாப்பு செயலாளர்களின் எழுத்துபூர்வ அனுமதியின்றி, பொது வீதி, பூங்கா, பொழுதுபோக்கு இடங்கள், மைதானங்கள், புகையிரத நிலையங்கள், கடற்கரையோரங்களில் தேவையற்ற விதத்தில் நடமாடுவதனை தடை செய்து இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அமைதியை பாதுகாத்துக்கொள்வதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் 16வது சரத்தின் கீழ் அரச தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமே இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுவதாக அந்த வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று சனிக்கிமை மாலை ஆறு மணி முதல் நாளை திங்கட்கிழமை காலை ஆறு மணிவரை ஊரடங்குச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நீச்சல்...

ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண நகரைச் சேர்ந்த 6 பேர் தனியார் விடுதியில் நேற்று முன்தினம் இரவு தங்கியிருந்து இரவு 1 மணியின் பின்னர் நீச்சல் தடாகத்தில் நீராடச் சென்றிருந்தார்கள் என தெரிவிக்கப்படுகிறது. நேற்று காலை விடுதி நிர்வாகத்தினர் நீச்சல் தடாகத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்த நிலையில் மிதப்பதை அவதானித்து குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவித்திருந்த நிலையில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். எனினும் உயிரிழந்தவருடன் மேலும் பலர் நீராடி இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சம்பவம் கொலையா? அல்லது இயற்கை இறப்பா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-33,104)

## கொழும்பில்...

அதன் நட்பு நாடான இலங்கையை பாதுகாக்கும் நோக்கில் டெல்லி இந்திய விமானப் படைத் தளத்தில் இருந்து 180 இந்திய இராணுவ வீரர்களுடன் ஒரு விமானமும் பஞ்சாப் ரெஜிமெண்டில் இருந்து 215 இராணுவ வீரர்களுடன் ஒரு விமானமும் தமிழ்நாடு, தாம்பரம் இந்திய இராணுவத் தளத்திலிருந்து மட்றாஸ் ரெஜிமென்ட் படையைச் சேர்ந்த 200 இராணுவ வீரர்களுடன் ஒரு விமானமும் முதல் கட்டமாக கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையம் வந்து இறங்கி உள்ளன என்று செய்தி இணையத்தில் வெளியாகியுள்ளது.

இலங்கையின் வேண்டுகோளுக்கு இணங்க இவ் அவசர உதவி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியப் போர்க் கப்பலான "விக்ரமாதித்யா", 4500 இராணுவ வீரர்களை ஏற்றிக்கொண்டு கொழும்பு துறைமுகத்தை நோக்கி வந்துகொண்டிருப்பதாக, இந்தியத் தூதரகத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று இணைய செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்செய்தி உண்மை இல்லை என இந்திய உயர்ஸ்தானிகராலயம் மறுப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசும் இச்செய்தியினை மறுத்துள்ளது. (ம)

# இலங்கையின் நிலையை கண்காணித்து வருகின்றோம்

## ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர்

(கொழும்பு)

அண்மையில் மிரிஹானவில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் இலங்கையின் நிலைமை கண்காணிக்கப்பட்டு வருவதாக இலங்கைக்கான ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் ஹம்டி தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு எதிராக மிரிஹான, பென்கிரிவத்தை வீதியில் உள்ள அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் இல்லத்திற்கு செல்லும் வீதியை 2022 மார்ச் 31 ஆம் திகதி இரவு பொதுமக்கள் முற்றுகையிட்டனர்.

இதனையடுத்து கலவர தடுப்பு மற்றும் போக்குவரத்து பொலிஸார் உடனடியாக அரச தலைவரின் இல்லத்தை சுற்றி பாதுகாப்பை பலப்படுத்தினர்,

இதனையடுத்து நாட்டின் பல பகுதிகளில் அரசுக்கு எதிராக போராட்டம் இடம்பெற்றுவருகின்றது.

இதனையடுத்து இலங்கையின் நிலைமையை அவதானிப்பதாக இலங்கை ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ம)

## நாட்...

கொழும்பில் ஊரடங்குச் சட்டத்தையும் மீறி மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹோமாகம பகுதியில் ஒன்றுகூடியுள்ள பெருமளவு மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

மக்களின் எழுச்சிப் போராட்டங்களை தடுக்கும் வகையில் அவசர கால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், திங்கட்கிழமை காலை வரை ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதனை பொருட்படுத்தாது மக்கள் தமது எதிர்ப்பினை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டின் பல பகுதிகளில் சிங்கள மக்கள் 'ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். (ம)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1231
வெற்றி இலக்கங்கள்
துலாம் 2 8 4 7 4 2
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1073
வெற்றி எழுத்து O சுப்பர் இலக்க 03
வெற்றி இலக்கங்கள் 11 28 39 79

மஹஜன சம்பத
திகதி 2022/04/02
சீட்டிழுப்பு இலக்கம் 4725
ஆங்கில எழுத்து C
வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 6 8 4 2 6
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.04.02
சீட்டிழுப்பு இலக்கம் - 755
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 35 67 68 80
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
NATIONAL LOTTERIES BOARD

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1528
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2022.04.02
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,301,640/-
வெற்றி இலக்கங்கள் 48 66 72 77
ஆங்கில எழுத்து U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.04.02
சீட்டிழுப்பு இல : 3863
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,359,980/-
வெற்றி இலக்கங்கள் 01 14 18 70
ஆங்கில எழுத்து P
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1702
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022/04/02
தினம் சனி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
A 05 22 27 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- ரூபா 56,031,158/-
அபிவிருத்தி லொத்தர் சபை
DLB<space>LOT<space>SB send 999

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
திகதி : 2022-04-02
வெற்றி வாரம் : 499 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.10,396,636/-
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 60 65 43
விதி எண் 6
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.2,675,960/-
ரூ.10,505,832/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,984,762/-
திகதி 2022-04-02
சீட்டிழுப்பு வாரம் 3414
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 04 07 48 58
ரிஷபம்
2 8 4 1 4 9 3
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,931,240/-

12 සතුට
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 04 27 29 42 74
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 878
வர்ணம் சிவப்பு
திகதி 2022.04.02 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 228,520,711/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது மக்கள் பாதுகாப்பு சட்டமல்ல ராஜபக்ஷ குடும்ப பாதுகாப்பு சட்டம்

## மனோ எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளது பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமல்ல. அது ராஜபக்ஷக்கள் பாதுகாப்பு சட்டம் என தெரிவித்துள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

கொழும்பில் நேற்று எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்பொழுது அமுல்படுத்தப்பட்டுள்ளது பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமல்ல. அது ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் சட்டம்.

பொதுமக்கள் வீதிகளில் கூடமுடியாது. பூங்காக்களில் கூடமுடியாது. கடற்கரையில், பேருந்து நிலையத்தில் கூடமுடியாதென கூறப்பட்டுள்ளது. கூடமுடியாதென்ற நிலைமை யாருக்கு ஏற்பட்டுள்ளது?

மனோ கணேசனுக்கா? பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவிற்கா? இல்லை. ராஜபக்சக்களிற்கு.

இன்று (நேற்று) நடைபெறவிருந்த ரகர் போட்டியொன்றில், ராஜபக்ச ஒருவர் விளையாடுகிறார் என்பதற்காகவே இட மாற்றம் செய்துள்ளனர். பார்வையாளர்கள் அந்த ராஜபக்சவை பார்த்து 'ஊ' சத்தமிடுவார்கள் என பயப்பிடுகிறார்கள்.

சில நாட்களின் முன் நுவரெலியா பூங்காவில் பிரபல பெண்மணியை மக்கள் விரட்டியடித்தார்கள். நாம் கவலையடைகிறோம். இந்த நிலைமையை நோக்கி அந்த குடும்பம் போனதை நினைத்து நாம் வேதனையடைய மட்டும்தான் முடியும்.

மக்களின் ஏகோபித்த வேண்டுகோள், இலங்கையர்களான எமது வேண்டுகோள், போய் விடுங்கள். சென்று விடுங்கள்.

இன்று மக்கள் தன்னெழுச்சியாக நடத்தவுள்ள போராட்டங்களை பார்த்து அரசாங்கம் அச்சமடைகிறது. இது ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்யவில்லை. ஆனால் அதை வாழ்த்துகிறோம்.

இன்று தலவாக்கலையில் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் ஒரு பேரணி ஏற்பாடு செய்திருந்தோம். ஊரடங்கு காரணமாக அதை இடைநிறுத்தியுள்ளோம். ஆனால் கொழும்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடவுள்ளோம்.

மக்கள் ஊரடங்கு சட்டத்தையும், அவசரகால சட்டத்தையும் நிராகரிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. சட்டத்தை மீறச்சொல்லவில்லை. ஆனால் சட்டம் கொண்டு வருவதற்கு நியாயம் இருக்க வேண்டும். தர்க்கம் இருக்க வேண்டும். அது இல்லை.



இது ராஜபக்ஷ குடும்பம் தன்னை பாதுகாக்கக் கொண்டு வந்த சட்டம். இதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றார்.(ம)

## மின்வெட்டு நேரம் குறைப்பு

(கொழும்பு)

இன்று 6 மணித்தியால மின்தடை அமுல்படுத்தப்படவிருந்த நிலையில் அதனை ஒரு மணித்தியாலமும் 40 நிமிடங்களாக குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போதிய எரிபொருள் கிடைக்கப்பெற்றுள்ளதன் காரணமாக இவ்வாறு மின் விநியோகத் தடைக்காலம் குறைக்கப்பட்டுள்ளதாக பொதுபயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, இன்றைய தினம் A முதல் W வரையிலான வலயங்களில் மாலை 05.30 முதல் இரவு 10.30 வரையிலான காலப்பகுதியில் இவ்வாறு ஒரு மணித்தியாலமும் 40 நிமிடங்களும் மின் விநியோக தடை அமுல்படுத்தப்படவுள்ளது. (ம)

## பேருந்து மீது கல்வீச்சு தாக்குதல்

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற அரச பேருந்து மீது அடையாளம் தெரியாதோரால் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்டம் புளியம்பொக்கணைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. (ம)

## மதுபான நிலையங்களிலும் அலைமோதிய குடிகார பெருமக்கள்

(கொழும்பு)

அரசாங்கம் ஊரடங்கை பிறப்பித்ததை அடுத்து அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்ய மக்கள் வியாபார நிலையங்களில் முண்டியடித்தனர்.

மக்கள் இவ்வாறு முண்டியடித்த நிலையில் மற்றுமொரு சாராரும் தமது வயிற்றை நிரப்ப மற்றுமொரு வியாபார நிலையத்தில் முண்டியடித்ததைக் காண முடிந்தது. அதுதான் மதுபானசாலைகள்.

நேற்று மாலை ஆறு மணியிலிருந்து நாளை (திங்கட்கிழமை) காலை ஆறு மணிவரை ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதை அடுத்து 'குடி'கார பெருமக்கள் தமக்கு தேவையான மதுபானங்களை வாங்குவதற்காக மதுபான நிலையங்களில் பெருமளவில் முண்டியடித்துள்ளனர். (ம)


### மணமகள் தேவை

மணமகன் விபரம் :
குடும்பம் - யாழ். இந்து கௌரவ குடும்பம், பிறந்த ஆண்டு- 1987, நட்சத்திரம்-சதயம் (3 ஆம் பாதம்), தொழில் - ஆசிரியர், எதிர்பார்ப்பு - அரசபணி (ஆசிரியர் விரும்பத்தக்கது)
நேரடியாகவோ, தரகர் மூலமாக தொடர்பு கொள்ளலாம். (10884)

076 270 3977

### IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH
- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை)A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (10853)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 55 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் 200 தென்னைகள் உள்ளன. (10868)

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை ரூ.450,000

ஜெயம் - 077 814 7389
077 241 7589

### G.C.E (O/L) English Language 2021

கடந்தகால 10 வருட வினாத்தாள்கள் Grammar விளக்கத்துடன் நடைபெறுகின்றது.

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
தரம் 10, தரம் 11

த.சிவானந்தன்
Genius Institute
No.184, A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (10874)

076 387 1033
071 310 6279

### வேலை வாய்ப்பு

எமது GM நிறுவனத்தின் புதிய கிளைக்கான பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளன. நாட்டின் அசாதாரண சூழ்நிலையை கருத்திற்கொண்டு மிகக்குறைவான தகைமை அடிப்படையில் இளைஞர், யுவதிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

முன்அனுபவம் ஏதுமின்றி பயிற்சியுடன் கூடிய தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும். நேர்முகத்தேர்வின் போது தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு பயிற்சியின்போது நிறுவனத்தினால் கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சியின் பின்னர் கவர்ச்சிகரமான ஊதியம் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். (10893)

076 245 8455, 076 526 2057

### K.P திருமண சேவை

எம்மிடம் சகல இன மத மணமகன், மணமகள் ஜாதகம் உண்டு. மற்றும் கணனி மூலமான ஜாதகம்(குறிப்பு) 40 வருட பலன் கணித்து தரப்படும். (10875)

077 005 0344

### ஆசிரியர்கள் தேவை

தெல்லிப்பளையில் இயங்கும் புதிய கல்வி நிலையம் ஒன்றுக்கு தரம் 1 - 5 வரை 5 பாடங்களுக்கும் தரம் 6 - 11 வரை விஞ்ஞானம், ICT, வணிகக் கல்வி, புவியியல் பாடங்களுக்கும் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். (10887)

077 834 3666

### சிறுநீரகம் தேவை

O, B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்பு:-
076 239 9874

### VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான வீசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான வீசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4072)

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவீஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension
இலங்கை வீசா நீடிப்பு தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org